

# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org

மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 துலை நல்லோரை புரட்டாசித் திங்கள் 31ம் நாள் நிறைமதி (17-10-2024 வியாழக்கிழமை) வெளியீடு +94 21 222 9722



## கந்தன் கவினாறு (கந்தசட்டி) நோன்பு ஆரம்பம்
## ஐப்பசி 16 - வளர்பிறை ஒருமைப் பிறைநாள் (02-11-2024)

உ

திருச்சிற்றம்பலம்

தமிழர்களாகிய நாம்
எங்கள் பிள்ளைகளுக்கு

## தூய தமிழில் பெயர் வைப்போம்

## பெயர் எங்கள் அடையாளம்

பிறந்த நட்சத்திரம் மற்றும்
பிறப்பு எண் அடிப்படையில்
பெயர் தெரிவு செய்ய

**www.peyar.org**

இது ஒரு தென்னாடு முன்னெடுப்பு ஆகும்



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னவன் பார்த்தீபன்** - தலைமை ஆசிரியர்,
BSc Eng (Hons) CPEng (Aust) FIEAust MA (Philosophy)
+6149949 3300, thennavan@thennadu.org




## நாம் இனித் தழைக்க நாவன்மை நமக்கு வேண்டும்

**எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு - (குறள் - 423)**

களத்திலும் சரி புலத்திலும் சரி, இனி எங்கள் பண்பாடு, மொழி, சமயம், வாழ்வியல், வரலாறு ஏன் அரசியல் மீண்டும் புத்துயிர் பெறவேண்டுமாயின் நம்மிடையே அறிவியல் மற்றும் ஆதாரங்களுடன் ஆணித்தரமாக பேசும் பேச்சாளர்கள் தேவை. இது தமிழ், சிங்கள மற்றும் ஆங்கில மொழி வழி இருத்தல் அவசியமாகின்றது. எங்கள் மொழியில் பெருமை, வரலாறு போன்றவற்றையும், சைவத்தின் உட்பொருள் உண்மை களையும் மற்றவர்களுக்கு எடுத்துச்செல்ல நாவன்மை மிகவும் முக்கியம்.

முன்னைய காலங்களில் கோயில்களில் சொற்பொழிவுகள், பிரச்சாரங்கள், வில்லிசை, நாடகங்கள்,பண்ணிசை நிகழ்ச்சிகள், நடனங்கள் போன்றவற்றின் ஊடாக சமயக் கருத்துக்கள் மக்களிடையே ஆழமாக விதைக்கப்பட்டன. தற்போது இவை அருகி வருவதை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும். அவற்றை ஈடுகொடுக்க நாங்கள் செய்ய வேண்டியவற்றையும் சிந்திக்கத் தொடங்கவேண்டும்.

பேச்சாளர் என்பவர் பேசும் போது மட்டுமல்ல, பேசிய பின்னும் கேட்போர் மனங்களில் நிற்கவேண்டும். அவர்கள் கூறிய விடயங்கள் வாழ்வியல் வழிகளில் எதிர்ப்படும் போது அது பேச்சாளரை நினைவுபடுத்தவேண்டும். ஏன் அவர்களை தங்கள் முன்னோடிகளாக சிந்தித்து பின்தொடர வைக்கவேண்டும். இப்படியான பேச்சாளர்கள் எம்மிடையே இன்று உள்ளார்களா என்ற கேள்வி எழத்தான் செய்கிறது. ஓர்சிலர் உளர், வேறுசிலர் பணத்திற்காக மட்டுமே வாய்திறப்பர். நாளுக்கு நாள் சித் தாந்தத்தை மாற்றுவார். இப்படியான பேச்சாளர்களை ஒரு வாசகர் இந்த யுகத்தில் தொடர்ந்து பின்தொர்வது கடினமாகிறது.

மேலும், பேச்சாளர்கள் வெறுமனே பேச்சாளராக மட்டும் இல்லாமல் சிந்தனையாளர்களாக தங்களை மாற்றிக் கொள்ள முன்வரவேண்டும். நாக்கினால் நல்ல நாடகம் ஆடி, நல்ல தமிழில் மேடையில் பேசினால் மட்டும் இனி புதிய தலைமுறை யினரிடம் எடுபடாது, நிச்சயமாக தத்துவச் சிந்தனைகள், ஆழ்ந்த அறிவு என்பன கட்டாயம் தேவை. இப்படி இருந்தால் மட்டுமே இனிவரும் சமுதாயத்திடம் நாங்கள் ஈடுகொடுக்க முடியும் என்பதனை வளர்ந்து வரும் பேச்சாளர்கள் சிந்திக்க வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டு, நாங்கள் எங்கள் சமுதாய மேம்பாடு என்று பொருள்கள் மற்றும் கட்டிட உதவிகளுடன் மட்டும் நின்றுவிடாது அறிவை, ஆளுமையை அதனுடன் சேர்த்து பேச்சுவன்மையை இளையோரிடம் வளர்க்கும் செயற்றிட் டங்களையும் முன்னெடுக்கவேண்டும். அதனைத் தொடர்ந்து இடைவிடாது செய்யவேண்டும். ஒரு சிந்தனையாளரால் தான் சமுதாய மாற்றம் வீறு கொள்ளும் என்பதை நாம் உணர வேண்டும். இது தமிழ் மொழிக்கும் மற்றும் எங்கள் பண்பாட்டுக் கூறான சைவ சமயத்திற்கும் நன்கு பொருந்தும்.

ஆகவே, அன்பான பெருமக்களே இதனைச் சற்றுச் சிந் தித்து, உங்களால் இயன்ற, உங்கள் ஆளுகை வட்டங்களில் இப்படியான சமய மற்றும் மொழிச் சிந்தனையாளர்கள், பேச்சா ளர்கள், ஆராய்ச்சியாளர்கள் , அறிவாளிகளை உருவாக்க முன்வாருங்கள். எங்கள் நிலத்திலும், புலத்திலும் இதற்க்கான தேவை நிறையவே உண்டு. இது காலத்தின் தேவையும் கூட என்பதை கருத்தறிந்து செயற்படவேண்டிய நேரமிது.

**நாநலம் என்னும் நலனுடைமை அந்நலம்**
**யாநலத்து உள்ளதூஉம் அன்று - குறள் 641**

**மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
அடுத்த தலைமுறை ஆசிரியர் – தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 671 6678 | nilavan@thennadu.org




# தென்னாடு நிறைமதி அறிக்கை

(15-09-2024) – ஆவணித் திங்கள் வளர்பிறைக் கழு வாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (17-09-2024) – மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 கன்னி நல்லோரை புரட்டாசித் திங்கள் 1ம் நாள் நிறைமதி அன்று (17-09-2024 செவ்வாய்க்கிழமை) நாற்பத்து ஒன்பதாவது தென்னாடு திங்கள் செய்தியிதழ் வெளியீடு நிறைமதி வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் ஓய்வுநிலை யாழ் கல்வி வலயப் பணிப்பா ளர் சிவத்திரு. அ. அகிலாதாஸ் அவர்கள் மற்றும் அவரது துணைவியார் ஓய்வுநிலை யாழ் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி. நளினி அகிலதாஸ் அம்மையார், யா / இளையதம்பி மகா வித்தியாலய அதிபர் சிவத்திரு. ஸ்ரீஸ்கந்தராசா அவர்கள் மற்றும் அவரது துணைவியார் யா/ கொக்குவில் ஸ்ரீஇராமகிருஷ்ண வித்தியாலய அதி பர் திருமதி. மை. ஸ்ரீஸ்கந்தராசா அம்மையார் மற்றும் அடியார்கள் பலரும் கலந்து சிறப்பித்திருந்தனர்.

(21-09-2024) – 2019ம் ஆண்டு தென்னாடு சைவ மாணவர் சபையினரால் நிலைப்படுத்தப்பட்டிருந்த, மட்டக் களப்பு சவுக்கடி ஞானலிங்கேச்சரர் பீடத்தில், எம்பெருமான் மீள் திருநிலைப்படுத்தல் செய்யப்பட்டு திருக்குட நன்னீ ராட்டுப் பெருவிழா சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

(30-09-2024) – புரட்டாசித் திங்கள் தேய்பிறைக் கழு வாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன. (02-10-2024) – நீத்தார் கடன் செய்ய சிறந்த திதி நாளான பேரொடுக்க மறைமதி (மாலயம்) சிறப்பு வழிபாடுகள் புரட்டாசி 16ம் நாள் (ஓக் 2, 2024) புதன்கிழமை அன்று ஐம்பூதநாதர் திருவடி யில், திருமஞ்சன வழிபாட்டுடன் சிறப்பாக இடம்பெற்றன. இவ்வழிபாட்டில் அடியார்கள் பலரும் கலந்து கொண்டு, தங்கள் முன்னோர்களுக்கான திதி வழிபாடுகளை ஆற்றி அருள் பெற்றிருந்தனர்.

(03-10-2024) – ஒன்பானிரவு (நவராத்திரி) விரத ஆரம்ப பூசைகளுடன் கும்பம் வைத்து சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. தொடர்ந்து ஒன்பது நாட்களும் மனோன் மணி அம்மைக்கு சிறப்பு அலங்காரத்துடன் வழிபாடுகள் இடம்பெற்றன. (06-10-2024) – அமரர் திருமதி வசுந்தரா தேவி பரமேஸ்வரநாதன் அவர்களின் திருவடிப்பேறு வழி பாடுகள் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் தெய்வத்தமிழில் சிறப்பாக இடம்பெற்றன. (08-10-2024) – அமரர் திரு மதி வசுந்தராதேவி பரமேஸ்வரநாதன் அவர்கள் பெருஞ் சோதி சேர்தல் வழிபாடுகள் அவரது இல்லத்தில் சிறப்பாக இடம்பெற்றிருந்தது.

(12-10-2024) – ஒன்பானிரவு (நவராத்திரி) நிறைவு வழிபாடுகளுடன் சிறப்பு வழிபாடுகளும் இடம்பெற்றன. இந்நாளில் பல அடியார் வருகை தந்து, வழிபாடு ஆற்றி திரு வருள் பெற்றிருந்தனர். (12-10-2024) – ஒசுத்திரேலியாவில் புரட்டாசி வளர்பிறை பத்தாம் நாள் (தசமி) அன்று மூன்று குழந்தைகளுக்கு செந்தமிழ் வழிபாடுகள் ஆற்றி ஏடு தொடக்கி வைக்கப்பட்டது. இவ்வழிபாடுகளை தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடத்தின் முதல்வர் அவர்கள் ஆற்றி வைத்தார்.

(15-10-2024) – கடையிற் சுவாமிகள் குருபூசை வழிபாடு கள் சிறப்பாக இடம்பெற்றது. (15-10-2024) – புரட்டாசித் திங்கள் வளர்பிறைக் கழுவாய் வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்றன.

**திருச்சிற்றம்பலம்**

# தவத்திரு. சாந்தலிங்க இராமசாமி அடிகளார் நூற்றாண்டு விழா தொடக்கம்


400 வருடப் பழமையான திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழிப் பேரூராதீனத்தின் முதலாவது குருமுதல்வர் தவத்திரு. சாந்தலிங்க ராமசாமி அடிகளாரின் நூற்றாண்டு தொடக்கவிழா, கடந்த செப்டெம்பர் 29 ஞாயிற்றுக் கிழமை அன்று, கோவை பேரூராதீனத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பேரூராதீனம் தவத்திரு. சாந்தலிங்க மருதாசல அடிகளார் தலைமை வகித்தார். தமிழ் வேள்வி, திருமஞ்சனம் பேரொளி வழிபாடு, திருவாசகம் முற்றோதல், **"பா ஒன்று பூ ஒன்று"** வழிபாடு மற்றும் கல்லூரியில் புகைப்படக் கண்காட்சியைத் தொடங்கி வைத்து, **"நமக்கு அடிகளாகிய அடிகள்"** எனும் நூலை வெளியிட்டு பேசினார்.

இந்தக் கூட்டத்தில், தமிழ்நாட்டில் உள்ள 100 கோயில்களில் உழவாரப் பணி மற்றும் பழைய கோயில்களைப் புனரமைத்தல், அயல்நாடுகளில் உள்ள சில பல்கலைக்கழகங்களில் சாந்தலிங்க இராமசாமி அடிகளார் பெயரில் அயல்நாடுவாழ் தமிழர்களின் பொருள் உதவியுடன் இருக்கைகள் அமைத்தல், மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு உதவி செய்தல், பறை இசையை உலகெங்கும் கொண்டுச்செல்லுதல், மலைவாழ் மாணவர்களுக்கு இலவசக்கல்வி வசதியை ஏற்படுத்துதல் ஆகியவை குறித்து விளக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முன்னாள் அமைச்சர் மு. கண்ணப்பன், பல்வேறு ஆதீனங்களைச் சேர்ந்த அடியார்கள், கல்லூரி நிர்வாகிகள், பேராசிரியர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**தகவல் - இணையம்**

**திருச்சிற்றம்பலம்**



# சிவனடி சேர்ந்தார்
## சிவத்திரு. சின்னத்துரை அருளானந்தம் அவர்கள்



யாழ்பாணம் தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட சிந்தனைச்செல்வர் அமரர் சின்னத்துரை (லீலா குரூப்) அவர்களின் மகனும் விடைக்கொடிச்செல்வர் தனபாலாவின் சகோதரருமான சமய, சமூக சேவகர், பிரபல வர்த்தகர் சிவத்திரு. சின்னத்துரை அருளானந்தம் அவர்கள், கடந்த வி பரமேஸ்வரநாதன் அவர்கள், பகைக்கேடு ஆண்டு புரட்டாசித் திங்கள் தேய்பிறை பத்தாம் பிறைநாள் (27-09-2024) வெள்ளிக்கிழமை அன்று சிவனடி சேர்ந்தார்.

இவர் கொழும்பு கப்பித்தாவத்தை கதிர்காம யாத்திரை சபையின் தலைவராகவும், அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவராகவும், கதிர்காமம் தெய்வானை அம்மன் ஆலய நிர்வாக குழு அங்கத்தவராகவும் விளங்கியதோடு, சிறந்த வர்த்தக பிரமுகராகவும் விளங்கியவர். பல்வேறு பகுதிகளில் இருந்து கொழும்பு வரும் அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு தங்குமிடம் உணவு உட்பட பல்வேறு நற்பணிகள் என பல சிவப்பணிகள் ஆற்றியவர்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த சிவத்திரு. சின்னத்துரை அருளானந்தம் அவர்களின் உயிர் உய்வடைய வேண்டி எல்லாம் வல்ல கொக்குவில் தென்னாடு அருள்மிகு ஐம்பூதநாதப் பெருமானிடம் விண்ணப்பம் வைக்கின்றோம்.

**"சிவசிவ என்னச் சிவகதி தானே"**

**திருச்சிற்றம்பலம்**

# அடியவரின் எளிமையான கேள்விகளும் திருத்தொண்டரின் ஆழமான பதில்களும்



**அருட்குருநாதர் முனைவர் இராமகிருஷ்னன் சிவகுமார் (பினாங்கு அறிவியல் பல்கலைக்கழகம்)**

**தென்னவன்: ஐயா அம்மனுக்குரிய பெயரில் "மனோன் மணி" மற்றும் "மனோன்மனி" இதில் எது சரியானது? இதில் சரி, தவறு என்று இல்லை. இரண்டிற்கும் சிறப்பான, ஆழமான விளக்கங்கள் உள்ளன.**

**சிவகுமார் ஐயா:**

*1. மன் + ஓன் + மணி = மனோன்மணி*

*மன்* (Mann): *மன் என்பது மனது, சிந்தனை என்பதை குறித்து நிற்கும்.* (It refers the mind, sometimes interpreted as "thought" or "mental faculty."). *மனதின் அல்லது சிந்தனையின் வெளிப்பாடு* (Represents the mind or thought.)

*ஓன்* (Ohn)*: ஓன் என்பது மேலான, மேதகு, உயர்வான, உன்னதமான என்றபொருளில் வரும்.* (Refers to something superior, supreme, or someone who has excelled. It can imply "one who is great" or "one who excels.")

*மணி* (Mani)*: மனத்தைக் கொள்ளை கொள்ளும் (அள்ளும்) மணி (கல்) என்ற பொருளைக் குறிக்கும்.* (Meaning "gem" or "precious stone," symbolizing something valuable or pure.)

*ஆகவே, மனோன்மணி என்றால் "அறிவுச் சுடரை ஓங்கச் செய்பவள்" என்று அல்லது "சிந்தையை ஒளிர்விக்கும் ஆற்றல்" என்று எடுத்துக்கொள்ளலாம்.* (Mano-on-mani could be interpreted as "The precious gem of a supreme mind" or "One whose mind is like a precious gem.The radiant mind of a great one.)

*2. மன் + ஓன் + மனி = மனோன்மனி*

*மனி* (Mani)*: மனம் பற்றற்றுச், சலனமற்று இயங்காமல் நிற்கும் நிலையை உன்மனி என்று கூறுவர்.* (Refers to one's own self, implying a form of recognition or valuation of oneself (*மதிப்பீடு* - "self-worth" or "respect"). *இதன் அடிப்படையில் மனோன்மனி மன மானிப்பை (மதிப்பீடு) தந்து மனோலயத்தை அருளுபவள் என்று பொருள் கொள்ளலாம்.* (In this context, "manonmani" can mean "One whose mind is self- esteemed or respected," especially referencing someone who possesses higher knowledge (Sixth Sense /Mwhk; mwpT), similar to a wise person.)

**மனோன்மணி** *அகத்தில் அருள் மின்னுதல் (சுடர்தல்)*
**மனோன்மனி** *அகத்தில் அருள் மன்னுதல் (பொருந்துதல்)*

*வார் அணி கொங்கை மனோன்மணி மங்கலி - திருமந்:402/1*
*இருள் புரை ஈசி மனோன்மணி என்ன - திருமந்:1046/3*
*மன்றது ஒன்றி மனோன்மணி மங்கலி - திருமந்:1061/3*
*மத்து அடைகின்ற மனோன்மணி மங்கலி - திருமந்:1062/3*
*மையலை நோக்கும் மனோன்மணி மங்கையை - திருமந்:1103/2*
*உறங்கும் அளவின் மனோன்மணி வந்து - திருமந்:1107/1*
*மாது சமாதி மனோன்மணி மங்கலி - திருமந்:1114/3*
*மாது சமாதி மனோன்மணி மங்கலி - திருமந்:1120/3*
*அம்பு அன்ன கண்ணி அரிவை மனோன்மணி*
*கொம்பு அன்ன நுண் இடை கோதை குலாவிய - திருமந்:1147/1,2*
*மாச்சு அற்ற சோதி மனோன்மணி மங்கை ஆம் - திருமந்:1160/2*
*ஆலிக்கும் கன்னி அரிவை மனோன்மணி*
*பாலித்து உலகில் பரந்து பெண் ஆகும் - திருமந்:1161/1,2*
*மல்ல ஒண்ணாத மனோன்மணி தானே - திருமந்:1164/4*
*மதுவ குழலி மனோன்மணி மங்கை - திருமந்:1171/3*
*வாயும் மனமும் கடந்த மனோன்மணி*
*பேயும் கணமும் பெரிது உடை பெண்பிள்ளை - திருமந்:1178/1,2*
*ஆகிய கோதண்டத்து ஆகும் மனோன்மணி*
*ஆகிய ஐம்பது உடனே அடங்கிடும் - திருமந்:1224/1,2*
*மார்க்கங்கள் ஈன்ற மனோன்மணி மங்கலி - திருமந்:1227/1*
*பெற்றான் பெருமை பெரிய மனோன்மணி*
*நற்றாள் இறைவனே நற்பயனே என்பர் - திருமந்:1251/1,2*
*அம்மனை அம்மை அரிவை மனோன்மணி*
*செம்மனை செய்து திருமங்கையாய் நிற்கும் - திருமந்:1253/1,2*
*மிக்க மனோன்மணி வேறே தனித்து ஏக - திருமந்:2487/3*

'மார்கழிப் பெருவிழாவை' முன்னிட்டு

# தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை நடாத்தும்

# திருவாசகக் கட்டுரைப் போட்டி

மார்கழித் திங்கள் 10ம் நாள் (25-12-2024) அன்று நடைபெறவுள்ள 'மார்கழிப் பெருவிழாவை' முன்னிட்டு மேற்படி போட்டியானது இரு பிரிவுகளாக, சிவபூமியாம் இலங்கையில் மாணவர்கள் மத்தியில் சைவ சமய அறிவாற்றலை வளர்க்கும் மற்றும் மேம்படுத்தும் நோக்கத்துடன், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட சைவ மாணவர் சபை, சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் நினைவாக நடாத்தும் மாணவர்களிற்கான கட்டுரைப் போட்டி.

**பிரிவு 01**

போட்டியாளர்கள்

**பாடசாலை மாணவர்களுக்கானது (தரம் 9 - 13)**

தலைப்பு

**"மாயப்பிறப்பறுக்கும் மன்னன்"**

சொற்கள்

**500 சொல்**

**பிரிவு 02**

போட்டியாளர்கள்

**பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி நிறுவன மாணவர்கள்**

தலைப்பு

**"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை"**

சொற்கள்

**1500 சொல்**

பாடசாலை மாணவர்கள் அதிபர் மூலம் தமது சுய ஆக்கம் என்பதை உறுதிப்படுத்தியும், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் உயர் கல்வி நிறுவன மாணவர்கள் தமது கல்வி அங்கத்-துவத்தை உறுதிப்படுத்தும் அடையாள அட்டைப் பிரதியை இணைத்தும் ஆக்கங்களை வருகின்ற கார்த்திகைத் திங்கள் 25ம் நாளிற்கு (10-12-2024) முன்னர் கிடைக்குமாறு சுய விபரங்களுடன் அனுப்பி வைக்க வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:

**தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம்,**
**தென்னாடு வீதி,**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,**
**யாழ்ப்பாணம்.**
+94 70 770 1111/ 021 222 9722

## பரிசில்கள் வழங்கும் விபரம்

| பிரிவு - 01 | பிரிவு - 02 |
|---|---|
| 1ம் இடம் -10,000 | 1ம் இடம் -15,000 |
| 2ம் இடம் - 5,000 | 2ம் இடம் - 10,000 |
| 3ம் இடம் - 3,000 | 3ம் இடம் - 5,000 |

*இரு பிரிவிலும் மேலும் 7 புத்தகப் பரிசில்கள் வழங்கப்படும். போட்டி முடிவுகள் மார்கழித் திங்கள் 5ம் நாள் (20-12-2024) அன்று அறிவிக்கப்படும். பரிசில்கள் மார்கழிப் பெருவிழாவன்று, யாழ்ப்பாண கலாச்சார மண்டபத்தில் வைத்து வழங்கப்படும். போட்டி முடிவுகள் தொடர்பான அனைத்து தீர்மானங்களும் தென்னாடு மடம் சார்ந்ததே.*

**திருச்சிற்றம்பலம்**

**தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி**

# தமிழ்வேதமாகிய திருக்குறளில்
# தமிழர் தத்துவம் சைவசித்தாந்தம்

**திருக்குறளுடன் ஏகான்மவாதம் பொருந்தாமை**

ஏகான்மவாதிகள், பிரமம் ஒன்றே உள் பொருள் என்றும், உயிர்கள் வெறும் தோற்றமே (மித்தை) என்றும் கூறுகி-றார்கள். எனவே அவர்களை ஒரு பொருட் கொள்கையினர் (Monotheist) என்பர். உயிரைப் பற்றிய ஏகாமைவாதக் கொள்கை, சற்று ஏறக்குறைய பௌத்தர்களின் கொள்கை-கயை ஒத்து இருக்கிறது. நானே பிரமமாக இருக்கிறேன் என்னும் கொளகையினை உடைய ஏகான்மவாதிகள், உயிரும் இறைவனும் வெவ்வேறு பொருள்களல்ல, இரண்டும் ஒன்றே என்கின்றனர். இக் கொள்கையைத் திருவள்ளுவர் உடன்படாமையினாலேயே.

**தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்**
**மனக்கவலை மாற்றல் அரிது - குறள் 7**

**"தனக்கு உவமை இல்லாதன்"** என்று இறைவனைக் குறிப்பிடுகிறார். இறைவன் ஒரு வகையாலும் தனக்கு ஒப்பாக எவரையும் வைத்துக் கருதப்பட முடியாதவன் என்பது இக்குறட்பாக் கருத்துக்குப் பொருளாகும், மேலும் திருவள்ளுவர், உயிர்கள் என்றும் உள்ளவை என்பதை "மன்னுயிர் என்னும் சொல்லால் தெளிவுபடுத்துகிறார். உயிர்கள் பலவாக உள்ளன என்பதைத் திருவள்ளுவர்,

**தம்மின்தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க் கெல்லாம் இனிது - குறள் 68**



செந்நெறிச் செல்வர் அமரர் சிவத்திரு.கு.வைத்தியநாதன் திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த நேர்முகப் பயிற்சி மைய முதல்வர்

**"மன்னுயிர்க்கு எல்லாம்"** என்னும் தொடர், என்றும் உள்ள எல்லா உயிர்களுக்கும் என்னும் பொரு-ளைத் தரும். "எல்லா உயிர்களுக்கும்" என்றமையால் உயிர்கள் பலவாய் உள்ளன என்னும் கொள்கையே திருவள்ளுவருக்கு உடன்பாடு என்பது தெளிவாகும்.

**"பிரமம் தனித்து இருக்கிறது"** என்பது ஏகான்மவாதக் கொள்கை. இறைவன் தனித்து இல்லை, அம்மையப்பராகவே இருக்கிறான் என்னும் கொள்கை யைத் திருவள்ளுவர்

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே உலகு - குறள் 1**

**"ஆதி பகவன்"** என்னும் தொடரால் நிறுவுகிறார், எனவே ஏகானம் வாதிகளின் கொள்கையைத் திருவள்ளுவர் ஏற்கவில்லை என்பது தெளிவாகிறது. திருவள்ளுவர் காலத்தில் ஏகான்மவாதம் ஏற்பட்டதில்லை, ஆயினும், எந்தக் காலத்துக்கும் பொருந்தும் கொள்கைகளையே திருவள்ளுவர் தம் நூலில் கூறியிருப்பதால், தோன்றிய ஏகான்மவாதக் கொள்கையின் பிற்காலத்தில் பொருந் தாமை எடுத்துக்காட்டப்பட்டது.

# வெளிநாட்டு மதங்கள் பொருந்தாமை

வெளிநாட்டில் தோன்றிய மதங்கள் ஆகிய கிறித் துவ சமயமும், இசுலாமிய சமயமும் மறுபிறப்புக் கொள்கையை மறுக்கின்றன. திருவள்ளுவர் மறு பிறப்புக் கொள்கையினை உடன்படுபவர் என்பதை முன்பே கண்டோம். பிறப்பும் இறப்பும் மாறி மாறி வரும் என்பதைத் திருவள்ளுவர்,

**உறங்கு வதுபோலுஞ் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு - குறள் 339**

இதிலிருந்து திருவள்ளுவர் நெறி, கிறித்துவ இசுலாமிய நெறிகளுக்கும் பொருந்தாமை பெறப் பட்டது.

கள் உண்ணாமை, கொல்லாமை, புலான் மறுத்தல் என்னும் அதிகாரங்களில், கள்ளையும் உயிர்க் கொலை யையும் திருவள்ளுவர் வன்மையாகக் கண்டிக்கிறார். எனவே, உயிர்ப்பலி இட்டும், கள்ளைப் படைத்தும் வணங்கும் சிறுதெய்வ வழிபாட்டையும் திருவள்ளுவர் உடன்படவில்லை என்பது பெறப்படும்.

# தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல் – கேட்போம் தெளிவோம்



சிவஞானச் செல்வர். மருத்துவர் ஈசான பிரதாபன் தேசிகர்

**இந்துமதம் என்பதற்கும் சைவசமயம் என்பதற்குமான வேறுபாடு என்ன?**

தெற்காசியா என்பது ஒரு தனிநாடு அல்ல! அதற்கென்று தனியானதொரு சட்டதிட்டங்கள் இல்லை. அதுவொரு பூமியின் ஒருபகுதி நிலப்பரப்பைக் குறிக்கும் பொதுச்சொல்லாகும். "நான் தெற்காசியன்" என்று ஒருவன் சொல்லவேண்டுமேயானால், அவன் இலங்கையனாகவோ இந்தியனாகவோ பூட்டான்காரனாகவோ நேபாளியனாகவோ இருத்தல் வேண்டும். தெற்காசியா நாடுகளில் எந்தவொரு நாட்டையும் சேராதவன், தன்னைத் தெற்காசியன் என்று கூறமுடியாது. மேலும், தெற்காசியா என்பதால் எந்தவொரு தனிநாடும் தனித்துப் பிரதிநிதித்துவம் பெறமாட்டாது. அது தெற்காசியாப்பகுதியில் உள்ள அனைத்து நாடுகளையும் குறிக்கும் பொதுச்சொல்லேயொழிய, தனிநாடொன்றின் பெயரன்று!

இந்துவென்பதும் அப்படியானவொன்றுதான். இந்து என்பதற்கு உலகிலேயே இந்திய அரசியல் சாசனம் மட்டுமே, வரைவிலக்கணத்தைக் கொடுக்கின்றது. அந்தவகையில் எவரெல்லாம் இசுலாமியர் இல்லையோ் எவரெல்லாம் கிருத்தவர் இல்லையோ, அவரெல்லாம் இந்து எனப்படுவர் என்பதுதான் இந்திய அரசியல் சாசன வரைவிலக்கணமாகும். அதாவது, இந்தியாவிற் தோன்றாத இசுலாமிய கிருத்தவ மதங்கள் தவிர்ந்து, இந்திய நிலப்பரப்பில் வழக்கிலுள்ள அத்தனை சமயங்களும் இந்து என்னும் சொற்பதத்தால் சட்டப்படி பிரதிநிதித்துவப்படுத்தப்படுகின்றது. இன்னும் சிறப்பாகச் சொன்னால், இந்திய நிலப்பரப்பில் தோன்றிய சமயங்கள் யாவும் இந்து எனப்படுகின்றது.

**அந்தவகையில், ஒருவன் தன்னை இந்துவென்று கூறும்போது, அவன் சமணசமயத்தவனா? சைவசமயத்தவனா? பௌத்தசமயத்தவனா? சுமார்த்தசமயத்தவனா? சீக்கிய சமயத்தவனா? வைணவசமயத்தவனா? என்றொரு எந்தவிதமான விளக்கமும் பெறமாட்டாது.** ஒரு இலங்கையன் ஏதேனும் ஒரு சாதனையை உலகளாவியரீதியிற் செய்துவிட்டுத் தன்னை தெற்காசியன் என்று கூறிக்கொண்டால், அந்தப் பெருமை இலங்கைக்குச் சாராதுபோய்விடும்! வெறுமனே தெற்காசியன் என்னும் வழக்கோடு எந்தவொரு நாட்டிற்கும் சாராது அப்பெருமை ஒழிந்துவிடும்! அதுபோல், ஒருவன் தன்னை இந்துவென்று கூறும்போது, அவன் எந்தச்சமயத்தவன் என்று உலகாரினால் அறியமுடியாதுபோய்விடுவதோடு, உலகாருக்கு தனித்துவமான சமயங்களின் சிறப்புக்களும் அறியப்படாதுபோய்விடும். சுமார்த்தமதத்தைப் பொறுத்தவரை பெண்களுக்கு முத்தியில்லை என்பது கோட்பாடாகும். சமணசமயத்தைப் பொறுத்தவரை கடவுட்கொள்கை இல்லை. ஆனால் சைவசமயம் கடவுட்கொள்கை உடையது. காரைக்கால் அம்மையார் முதலிய பெண்கள் பலரும் முத்திபெற்றதாகச் சொல்லும் உயர்ந்த சமயநெறி சைவசமயமாகும். ஆனால், சுமார்த்தமதக் கொள்கைகளைப் படித்த ஒருவன், "இந்துமதம் பெண்களுக்கு முத்தியில்லையென்று கூறுகின்றது" என்று கருத்துரைக்கும்போது, அப்பழி சைவசமயத்தவர்களுக்கும் தேவையில்லாது வந்து சேர்ந்துவிடுகின்றது.

மேலும், இலங்கைக் கல்வி அமைச்சின் பெயரைத் தெற்காசியக் கல்வி அமைச்சு என்று பெயர் வைத்தால், பூட்டான் கல்விக்கொள்கையையும் இலங்கையிற் புகுத்தமுடியும். அதுபோலவே, இந்து மதம் என்னும் பெயரைச் சைவசமயத்தார் சுமக்கும்போது, சுமார்த்தமதம் முதலிய ஏனைச் சமயங்களின் கருத்துக்களும் தேவையில்லாமற் புகுத்தப்படும். எனவே, சைவசமயம் என்று சைவசமயத்தார் நிற்பதே சைவசமயத்தவர் கடனாகும். இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் ஆசிரியராகவும் ஏனைய அரசுப்பதவிப்பணிகளின் பொருட்டும் குடியேறிய சுமார்த்தமதத்தர், தம்மதப்பெயரையும் பயன்படுத்த விரும்பாது, அதேசமயம் சைவசமயம் என்ற சொற்பதத்தில் உள்ளளவிற் உவப்பில்லாமலும் இருந்ததினால், இச்சுமார்த்தமதத்தர் திருக்கோயிற் பூசைகளிலும் நுழையத்தொடங்கிச் செல்வாக்குப் பெற்றிருந்தமையால், சைவசமயம் என்று விளங்கிய சைவைத்தியாசாலைகளுக்கு இந்துவென்னும் பெயரைப் பேணுவதே பொருத்தம் என்று நம்மவரை ஏமாற்றலாயினர். அதன் விளைவே, எங்கும் இந்துவென்ற சொற்பதம் புழக்கத்தில் பெருத்து நிற்பதற்குக் காரணமாகும். வரலட்சுமிவிரதம் என்பது வைணவசமய விரதமோ, சைவசமய விரதமோ அன்று. அதுவொரு சுமார்த்த மத குழுமம் ஒன்றின் விரதமுறையாகும். தமிழ்நாட்டில் எந்தவொரு வைணவத்தலங்களிலும் இந்தவிரதம் பின்பற்றப்படுவதில்லை. இலட்சுமியைத் தம் தாயார் என்று போற்றும் வைணவரே அவ்விரதத்தை மேற்கொள்வதில்லை. ஆனால், இந்துமத விரதம் என்னும் பெயரில் சைவாலயங்களிலும் சைவசமயத்தவரிடமும் இந்தவிரதம் இன்று பரவிவிட்டது. இவ்வாறான பல குழப்பங்களும் முரண்களும் சைவசமயத்தவரிடம் பரவுவதற்கும், தமிழரின் சுயமான பண்பாட்டு மரபுகள் கெடுவதற்குமே இந்துவென்ற சொற்பதம் நிலைக்களனாக உள்ளது. இலங்கைக் கல்வி அமைச்சுக்கு தெற்காசியக் கல்வி அமைச்சென்று ஒருபோதும் இலங்கை அரசு பெயர் வைக்காது. ஆனால், சைவசமயத்தவர்களாகிய நாங்கள், எங்கள் கல்லூரிகளுக்கு எங்கள் சமயப்பெயரைவிடுத்து இந்துவென்று ஒரு பொதுப்பெயரை வைத்துக்கொண்டோம். எங்கள் சமயத் திணைக்களத்திற்கும் எங்கள் பல்கலைக் கழகத் துறைகளுக்கும் எங்கள் சமயப்பெயரைத் தவிர்த்தோம். இதன் விளைவுகளையே இப்போது அனுபவித்துக் கொண்டுள்ளோம். பொதுவாகப் பிற வலிமையான இனம் வலிமை குன்றிய இனத்தின் அடையாளங்களை ஒழிப்பதுதான் வாடிக்கை. ஆனால், ஒரு இனம் தனது சொந்த அடையாளத்தைத் தானே வலிந்து ஒழித்தது வருகின்றதென்றால், அது தமிழினமாகத்தான் இருக்கும். அதாவது, இந்துக்கல்லூரி, இந்துமன்றம், இந்து கற்கைகள் பீடம், இந்துத் திணைக்களம் என்று எல்லா இடங்களிலும் சைவசமயம் என்னும் சொற்பதத்தைத் தொலைத்தே நிற்கின்றோம்.

திருச்சிற்றம்பலம்



# சிவபூமியில் சிவனைத் தேடி

## தேரோடும் தேசத்து சிவன் கோயில் கொக்கட்டிச்சோலை தான்தோன்றீசுவரர்

(கடந்த திங்கள் தொடர்ச்சி )

### அரசர்களின் திருப்பணி

இக் கோயிலுக்கு குளக்கோட்டன், கலிங்க மாகன், விமலதர்மசூரியன், விக்கிரமசிங்கன் என்னும் மன்னர்கள் மானியங்கள் வழங்கினார்கள் என்ற செய்திகள் மரபு வழியாகக் கூறப்பட்டு வருகின்றன. இம்மன்னர்களால் வயல் நிலங்கள் வழங்கப்பட்டதாகவும், கோயிலின் பூசைக்குரிய திட்டங்களை வகுத்தளித்ததாகவும் கூறப்படுகின்றது. இன்று வரை இம் மன்னர்கள் வழங்கிய நிலமானியம் நடை முறையில் இருந்து வருகின்றது. இதற்கு குருக்கள் பரம்பரைக்கு கொடுக்கப் பட்ட தேவிகாமுனை பள்ளி கொண்டான் வெளியும், வே-ளாளருக்கு கொடுக்கப்பட்ட அத்தியாமுன்மாரி வெளியும் சான்றாகும்.

குறிப்பாக கலிங்கமாகோனின் ஆட்சிக் காலத்தில் கிழக்கிலங்கையில் திருக் கோணேச்சரம், திருக்கேதீச்சரம், தான் தோன்றீசுவரம் போன்ற திருக்கோயில் கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. அங்கு வீரசைவ மரபுகளும் செழித்திருந்தன. மட்டக்களப்பு மான்மியம் (பக் 79) எனும் நூலில் கலிங்க மாகோன் கொக் கட்டிச்சோலை ஈசுவரத்திற்கு செய்த பணி கள் கீழ்வருமாறு குறிப்பிட்டுள்ளது.

"தேரோடு கோபுரம் தீர்த்தக் குளமும்
படிக்கெதிர் வாவி பத்ததி முறையால்



சைவப்புலவர்
சுந்தரமூர்த்தி துஷ்யந்த்
கலைமாணி முதுகலைமாணி, பிரான்சு

வையகம் புகழ் மட்டக் களப்பில்.
செய்தனன் மூன்று திருச் சந்நிதிதான்."

மட்டக்களப்பு மான்மியத்தில் இடம் பெறும் **"பங்கு கூறும் கல்வெட்டு", "சாதித் தெய்வக் கல்வெட்டு" "தாதன் கல்வெட்டு", "போடி கல்வெட்டு" "முக்குகர் வன்னிமை"** முதலியவை கொக் கட்டிச்சோலையோடு தொடர்புடைய கல்வெட்டுப் பாடல் களாகும். இவற்றில் **"பங்கு கூறும் கல்வெட்டு"** மற்றும் **"பங்கு தடுக்கும் முறை கல்வெட்டு"** என்பன மாகோன் இக்கோயி லுக்கு வகுத்துக் கொடுத்த விதிமுறைகளைக் கூறுகின்றது இவர் வகுத்த கல்வெட்டுப்பாடல்கள் இன்றும் இக்கோயிலில் சுவாமி சூகர வேட்டைக்குப் போகும் போதும் கஞ்சிமுட்டி கூறும் போதும் (குடுக்கை கூறல்) படிக்கப்பட்டு அதன்படி சட்டதிட்டங்கள் செய்யப்பட்டு வருவதும் கண்கூடு. **"பங்கு கூறும் கல்வெட்டு"** பாடல்களில் மாகோன் வகுத்த கோயில் கடமைகளும், யார், யார் முன்னுரிமை அடிப்படையில் **"வரிசை"** வாங்குவோர் பற்றிய விபரம் கூறப்பட்டுள்ளது.

"குருவளர் கலிங்கன் செகதலம் புகழ
மரு மலர் தேவ தொண்டரை வகுத்து
ஆலய மியற்றி அணிமணி அமைத்துச்
சீலமோ டானுரு செய்தாங் கிருத்தி
மறையோன் றன்னை வாவென வழைத்து
முறையாய்ப் பூசை மூன்றிரு நேரம்
உறுமன் குலத்தாய் மேவி ஆலயத்தில்
அறகொடு தற்பை, ஆவின் பால் கனி
நற்நெய் பொங்கல் நல்லிள நீரொடு
சிறு தேன் சருக்கரை தேங்காய் கரும்பு
மற்பொரு மாங்கனி வருக்கன் தேங்காய்
அற்புத முடனே, அநேக வர்க்கமும்
சேர்த்து நீபடைத்துச் சிவனார்க் கூட்டச்
சூத்திரச் சாதி தொழுது உன்னூழியம் புரிய
வகுப் பொடு வகுப்பாய் வழமைகளறிந்து
செகத்தோர் துதிக்கத் திருவேட்டை சென்று
ஆடிப் பாடி ஆறி அங்கிருந்து..."

"ஆரார்க்கு முன்பின் அளிப்பது என்ன
திறலோன் கலிங்கன் செப்பினன்
பெரிய திருப்பதி வாசல்
அறமுயர் வேதம் நம்பியரி திருப்பாட்டுச்
சரிகை சன்னாசம் தார் வளர்..."

இவற்றின் மூலம் இக்கோயிலிற்கு கலிங்க மாகோன் புரிந்த திருப்பணிகள் நன்கு புலப்படும்.

### திருக்கோயில் நிர்வாகக் கட்டமைப்பு

இக் கோயிலின் நிர்வாகம் பழமை வாய்ந்தது. இக் கோயி லின் தலைவர்களாக மூன்று வண்ணக்குமார் தனித்தனியாக வும் கூட்டாகவும் இயங்குவர். இவர்கள் "முற்குகர்' என்னும் சாதியைச் சார்ந்தவர்கள் இச்சாதியினருள் அடங்கும் காலிங் காகுடி, உலகிப் போடிகுடி, படையாண்டகுடி என்னும் மூன்று குடிகளிலிருந்தே வண்ணக்குமார் பதவி வகிப்பர். இவர்களுள் காலிங்காகுடி தலைமைப் பதவிக்கும், உலகிப் போடிகுடி பொருளாதார விடயங்களுக்கும், படையாண்ட குடி நிருவாக நடை முறைகளுக்கும் பொறுப்புடையவர்களாக விளங்குவர்.

மற்றும் பூசை புரியும் குருக்கள் பரம்பரையினர் வீர சைவத்தைச் சேர்ந்த சங்கமர் ஆவர். இங்கும் சங் கமர் தாய்வழி உரிமையாக, மருமக்கள் வழியில் பூசைகள் புரியப்பட்டு வருகின்றனர்.

கலிங்க மாகோன் இக் கோயிலுக்கு வகுத்த அரன் ஊழி யம் உட்கடமை, வெளிக்கடமை எனப் பிரித்து வேளாளரும் அவர்களோடு கூடிய சிறைக்குடிகளும் மிகக் கட்டுக் கோப் புடன் புரிந்து வந்துள்ளனர் என்பதனை பங்கு கூறும் கல்வெட்டு பறை சாற்றுகின்றது.

" கலிங்கனே உனது கட்டளைப்படியே
இலங்கை மாநகரில் ஈசராலயத்தில்
வீதி துவக்கும் வேளார்க் கடிமைகள் மாதுலர் கோயிலார்
வரிசைப் பண்டாரம்.
குசவர் கொல்லர் கோனார் தொழுவர்
திசை புகழ் முதலி செக்கன் சாணான்
யீரங் கொல்லி யீட்டியன் பள்ளு
வார்ந்தட்டி மாலை தொடுப்போன்
கடையன் துரும்பர்க்குக் காராளனந்து"

இதே போல் **"கோவசியர்"** என்ற மக்களை அழைத்து ஏழ குடிகளாய்ப் பிரித்து அவர்கள் கோயிலுக்குள் விளக்கேற் றல், பூவெடுத்தல், தூசு அகற்றல், சாணம் இட்டு மெழுகல், பூமாலை கட்டுதல், மேளம் அடித்தல், சந்தணம் அரைத் தல், நெல்லுக் குற்றுதல், சுவாமி காவுதல், அமுதுவைத்தல் போன்ற திருத்தொண்டுகளைப் புரிய வேண்டும் என்றும் மாகோன் வகுத்த அரன் ஊழியம் குறிப்பிடுகின்றது.

"கண்டனோடு சருகு பில்லி கட்டபத்தன் கருதரிய
கவுத் தனுமத்தியாயன்
மண்டலத்தில் பொன்னாச்சி வயித்தியென்று
கோவசியர் மக்களிலே வருணமாக்கிப்
பண்டு முறை தவறாமல் ஏழுகுடியாய்ப்
பகுத்தீசர் பணிபுரியப் பரவணியாம்
அண்டர் தமைச் சாட்சி வைத்துத் தத்தம் வாங்கி
அரனகத்து ஊழியராய் அமைத்துச் சொல்வார்."

இவர்கள் செய்யும் சிறப்பான கோயிற் கடமைகள் கருதி அவர்களை **'கோயிலார்'** என்ற சிறப்புப் பெயராலும் அழைப்பர். தற்காலத்தில் இக்குடிகளில் மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன. இவ்வாறு இக்கோயிலின் ஒரு திருவிழாச் சேவைக்கு எழுபது மரக்கால் நெல் படியாகக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நெல் அளவு தொண்டூழியக்காரர்களின் சேவைகளுக் கேற்ப பகிர்ந்தளிக்கப்பட்டும் வருகின்றது.

இக் கோயிலின் நிர்வாக வேலைகளைக் கவனிக்க ஒன்றுகூடுகின்ற பொதுமக்களை தேசம் என்றும், தேசத்துக் கூட்டம், தேசமகாசபை என்றும் இன்றளவும் வழங்கி வரு கின்றது. தேசத்துக் கூட்டம் நடைபெறும் போது தேசத்து வன்னிமையின் தலைமையிலேயே நடைபெற்று வந்துள் ளது. காலப்போக்கில் இக்குல மக்கள் இல்லாத காரணத்தி னால் உலகிப்போடி, கலிங்க, படையாட்சிகுடி வண்ணக்குமார் தலைமையிலே இத்தேசத்துக் கூட்டம் நடைபெற்று வரு கின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

திருச்சிற்றம்பலம்

# அடியார் பெருமையின் ஆவண ஊற்று - பெரிய புராணம்:

## ஞாலம் உய்ய எழுந்தருளும் நம்பி தம்பிரான்தோழர்



**"சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ண முரைசெய்வோம்"**

### ஆலால சுந்தரர் வரலாறு தொடக்கம்

மெய்ப்பொருளாகிய சிவபெருமான், தம் திருவுடம்பில் அணிதற்குரிய, தேன் பொருந்திய மலர்களால் தொடுத்த திருமாலையையும், அணிதற்குரிய திருவிரலால் அள்ளுகின்ற திருவெண்ணீற்றினையும் எடுத்துக் கொடுக்கும் திருத்தொண்டர் ஒருவர் இருந்து வந்தார். அத்திருத்தொண்டரின் பெயர் ஆலாலசுந்தரர் என்பதாகும். அவர் முன்பொரு நாள், திருக்கயிலையில் வீற்றிருக்கும் சிவபெருமானுக்கு, இன்ன மலர்கள் உரியனவாம் எனக் கருதி, அம் மலர்களைக் கொய்தற்கெனத் திருநந்தனவனச் சோலைக்குச் சென்றருளினர்.

அத்திருநந்தனவனத்தில் ஆலாலசுந்தரர் வருதற்கு முன்னதாகவே, மலர்களைக் கொணர்தற்காக, அருளுகின்ற தலைவியாம் உமையம்மையாரது, முழுமதியென விளங்கும் ஒளி பொருந்திய முகத்தினையுடைய தோழியர் இருவர் சென்றிருந்தனர். அத்தோழியர், அளவிறந்த சிறப்பினையுடைய அனிந்திதை என்பாரும், நுணுகிச் செறிந்த கூந்தலையும் நறுமணம் மிக்க மாலையையும் உடைய கமலினியாரும் ஆவர். கொத்தாகப் பூத்த அழகிய மலர்களை அவர்கள் கொய்து கொண்டிருக்கும் பொழுது, வருகை தந்த ஆலால சுந்தரர், அவ்விரு தோழியர் மேலும் தம் மனத்தைச் செலுத்த, காதலுற்ற அவ்விரு பெண்களும் தமது கட்பொறியினால் பொருந்த நோக்கினர்.

இந்நிகழ்வினை சேக்கிழார் பெருமான் கீழ்வருமாறு அழகாக எடுத்தியம்புகின்றார்.

**மாத வம்செய்த தென்றிசை வாழ்ந்திடத்
தீதி லாத்திருத் தொண்டத் தொகைதரப்
போது வாரவர் மேல்மனம் போக்கிடக்
காதல் மாதருங் காட்சியிற் கண்ணினார்**

அவ்வாறு கண்ட மகளிர், அத்திருநந்தனவனத்தை விட்டுச் செல்லும் முன்னரே, வண்டுகள் மொய்த்தற்குரிய புதிய மலர்களை எல்லாம், "இவையே என்னை ஆட்கொண்டருளும் இறைவற்குப் பொருந்துவன" எனக் கருதி பறித்த மலர்கள் பலவற்றையும் ஆலாலசுந்தரர் கொண்டு செல்ல,

குளிர்ந்த மலர்களைக் கொய்த அன்னத்தை ஒத்த அத்தோழியரும் திருநந்தனவனத்தை விடுத்துச் சென்றனர்.

யாவற்றிற்கும் மூலவரான சிவபெருமான், மலர் கொய்து கொண்டு தம்பால் வந்து நிற்கும் சுந்தரரைப் பார்த்து, "நீ அத்தோழியரின் மீது மனம் வைத்தாய் ஆதலின் தென்னகத்தில் தோன்றி, அம்மகளிரிடத்து இன்பம் துய்த்து, மீண்டும் இங்கு வருவாயாக" என்று அருளனார்.

கைகளைத் தலைமேல் வைத்துக் குவித்து வணங்கி, மனம் கலங்கியவராகிய சுந்தரர், "ஐயனே! நும் செவ்விய வாயவும், சிறந்தனவுமான திருவடிகளைப் பிரிந்து நீங்கும் சிறுமையுடையனாகிய அடியேன், மயக்கம் பொருந்திய மானுடப் பிறப்பில் பிறந்து மயங்கும் பொழுது, பெருமானாராகிய நீர் வந்து அம்மயக்கத்தினின்றும் தடுத்து, அடியேனை ஆட்கொண்டருள வேண்டும்" என்று விண்ணப்பம் செய்தார்.



இறைவனும், அவர் கேட்டுக் கொண்ட விண்ணப்பத்திற்கு அருள் செய்தபின், அனிந்திதை, கமலினி என்னும் அவ்விரு பெண்களுடன், ஆலாலசுந்தரர் தென் திசைக்கண் வாழ்தற்குரிய மானுடப் பிறவியில் தோன்றி, அப் பெண்களுடன் இன்புற்று வாழ அருள் புரிந்தார்.

இவ்விடத்தில் **"மயங்கி, வலைப்பட்டார் மற்றையவர்" (குறள், 348), "மால் கொடுத்து ஆவி வைத்தார்" (தி.4 ப.33 பா.4), மறக்குமாறு இலாத என்னை மையல் செய்து இம் மண்ணின் மேல், பிறக்குமாறு காட்டினாய்" (தி.2 ப.98 பா.5)** எனவரும் திருக்குறள், திருமுறைக் குறிப்புகளையும் குறிப்பிட்டுச் செல்லலாம்.

### சுந்தரர் பெருமான் நம்பியாரூரர் எனும் திருப்பெயர் பெறல்

சிவபெருமானின் திருவருளினால் நம்பியாரூரர் தோன்றுதற்கு இடமாக விளங்கும் மேதக்க தவம் நிறைந்ததும், மேம்பட்ட நலங்களை உடையதும் ஆகிய திருப்பதி, மெய்ந்நெறியினின்றும் வழுவாத மறையவர்கள் மிக்கிருக் கும் திருநாவலூர் என்னும் திருப்பதியாகும்.

ஒரு நாட்டின் வளம் அங்குள்ள நிலத்தானும், நீரானும் மட்டும் அமைவதன்று அங்குள்ள பெருமக்களாலும் அமைவதாகும்.

**"எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாழிய நிலனே" (புறநா. 187)**
**"ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர் பலர் யான் வாழுமூரே" (புறநா. 191)**

என்ற புறநானூற்றுக் கூற்றுக்களையும் காண்க. இவ்வகையில் திருமுறை ஆசிரியராகிய சுந்தரரும், நாவரசரும் தோன்றியதும், சந்தான ஆசிரியர்களில் மெய்கண்டார், அருணந்தி சிவாசாரியார் ஆகிய இருவரும் தோன்றியதும் ஆன பெருமை இந்நாட்டிற்கு உண்டு.

அவ்வகையில், சிவபெருமானுக்கு வழிவழியாக அகத்தடிமை செய்து ஒழுகும் ஆதி சைவர் குலத்தில் தோன்றிய மேம்பட்ட சடையனாருக்கும் இசைஞானியாருக்கும் மகனாகத் தோன்றியருளினார் சுந்தரர் பெருமான். இவ்வாறு சிவபெருமான் திருவருளினாலே தோன்றிய அவருக்கு, தவத்தின் நிலையில் மேம்பட்டோரும் போற்றத்தக்க நம்பியாரூரர் எனும் பெயரிட்டு, மேதக்க ஐம்படையையும், சதங்கையையும் முறையே மார்பிலும், காலிலும் அணிவித்து அழகிய இரத்தினச் சுட்டியை நெற்றியில் தாழுமாறு தலையில் சூட்டி, சிவந்த பொன்னாலாய அரைஞாணை இடுப்பில் விளங்க அணிவித்து, திகழும் அவர், வீதியில் சிறுதேர் உருட்டி விளையாடும் ஒருநாளில் அந்நாட்டு அரசரான நரசிங்க முனையர் என்பவர், அந்நம்பியாரூரரைப் பார்த்துச் சொலற்கரிய ஆசை மிகுதியால், அவர் தந்தையாராகிய சடையனாரிடத்துச் சென்று, அவருக்கும் தமக்கும் இருக்கும் நட்பு மிகுதியால், அந்நம்பியாரூரரை வேண்டிப் பெற்றுக் கொண்டு, தம்மரபில் பிறந்த இளவரசருக்குச் செய்யும் சிறப்புக்களையெல்லாம் செய்து, அன்போடு தம் மகனாராக வளர்த்து வந்தார்.

நரசிங்க முனையரின் பேரன்புக்குரிய திருமகனாராய் வாழ்ந்து வருவதோடு, அதன் பின்னும் தம்முடைய ஆதிசைவ மரபில் கொண்டு ஒழுகத்தகும் ஒழுக்கங்களையும் கொண்டு வளர்ந்து, முந்நூல் அணியும் காலம் வர, அதனையும் அம்மரபு வழி நின்று ஏற்று, எண்ணிறந்த மறை முதலாய நூல்களையும் கற்றுத் தெளிந்து, செல்வம் தழைய நிற்கும் சிறப்பைப் பெற்றுச் சிறப்புமிக்க திருமணப் பருவத்தை அடைந்தார்.

தந்தையாராகிய சடையனார் தம் ஒப்பற்ற திருமகனாருக்கு, ஆதிசைவ குலத்தில், தம் அரும்பெரும் மரபிற்கு ஏற்ப வழிவழியாக வாழ்ந்து வரும் சிறப்புடைய புத்தூரில் வாழும் சடங்கவி சிவாசாரியாரின் மகளாரைத் திருமணம் செய்தற்குத் தக்கோர் வாயிலாகக் கேட்டு அனுப்பினார். சடங்கவி சிவாசாரியாரும் திருமணம் செய்தற்குரிய முறைமைகள் பலவற்றையும் ஒருங்கு பேசி முடித்து, தம் மகட்கும் வரும் மணவாளருக்கும் உரிய ஒத்த பண்புகள் உளவாதலைக் கண்டு தம் மகளைக் கொடுக்க இசைந்தார். சடங்கவியார், தம் மகளைக் கொடுக்க இசைந்து கூறிய சொற்களைக் கேட்டவர்கள், நம்பியாரூரரைப் பெற்ற தந்தையாராகிய சடையனாரிடத்தில் சென்று கூறிய பின்பு, அத்திருமணச் செயலை மகிழ்வோடு சுற்றத்தாரிடம் கூறித், தம் மகனார் அரசிளம் செல்வராக வளர்தற்கு ஏற்பத் திருமணச் செய்கையை உறுதி செய்து, அதற்குரிய திருமண ஓலையையும் அனுப்பினார்.

மங்கலம் பெருகுமாறு எழுதிய அம்மணவோலையை எடுத்துக் கொண்டு, ஆடவர் பலருமாக ஒருங்கு கூடி, புத்தூருக்குச் சென்றார்கள். அவர்களை எதிர்கொண்டு வந்த சடங்கவியாரின் உறவினர் பெண்களும் ஆடவர்களும் அம்மணவோலையை வணங்கி வாங்கிக் கொண்டார்கள். மறையவர்கள் அனைவரும் ஒருங்கு கூடி முளையிட்டுத் திருமண ஏற்பாடுகளை தொடங்கினார்.

இந்நிகழ்வை சேக்கிழார் பெருமான் பதிவிடுகையில், இசைஞானியாரை,

**"வள்ளல் தன்னைப் பெற்றவர்"**

என்று குறிப்பிட்டுச் செல்கிறார். இங்கு சுந்தர் பெருமானை "வள்ளல்" என்று குறிப்பிடக்காரணம், இறைவன்பால் தாம் பெற்ற பேரருள் திறத்தை வழிவழியாகப் பின்னுள்ளோரும் தம் திருவாக்கின் வழிப் பெற அருளிய வள்ளன்மை கண்டே "வள்ளல்" என்கிறார்.

**திருச்சிற்றம்பலம்**

**திருமலைச் சருக்கம் - (30-40), (146-157)**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**படம்-தேவராஜன் நடராஜன்** அவர்களின் முகநூலில் இருந்து

# திருவாசகத் தெளிவு -
# சிந்தனை நின்றனக்காக்கி...



**“மனிதப்பிறவி எமக்குக் கிடைத்ததன் பயன் என்னவெனில் இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டே”** என்கின்றார் ஆறுமுகநாவலர் பெருமான். இப்பிறவியை எமக்களித்த இறைவன், எல்லா விசைகள் பக்கமும் சாயக் கூடிய மனதையும், சிந்தனையையும் கூடவே படைத்தான். இவை முத்தியின் பொருட்டு முயலும் ஆன்மாவைத் தடுக்கவும், மந்தப்படுத்தவும், முத்தியைப் பற்றியோ, இறைவனைப்பற்றியோ எண்ணாமல் இருக்கவும் தூண்டும் தன்மை வாய்ந்தவை. மாயையின் தோற்றுவாய்களான உலகமும், பிற சுக போகங்களும் எம் கண்களில் படுகின்றன. அவை காட்சிப் படிமங்களாக மனதில் பதிகிறது. மனம் அவற்றை உள்வாங்கி ஆசையை உருவாக்கி வெளிப்படுத்துகிறது. ஆன்மா அதற்கு மயங்கி புத்தியை அச் சுகபோகங்களைத் தேடவும், அதன் பொருட்டு பொருள் சேர்க்கவும் உந்துகின்றது. இதனால் பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் இவ்வான்மா, பெறுதற்கரிய பிரான் அடி பேணாமல் பேதலிக்கின்றது. பிறவிச் சூழலில் அகப்பட்டு மீண்டும் மீண்டும் பிறந்து இறக்கின்றது.

இச் சூழலை வெல்ல, மாணிக்கவாசகர் ஒரு உபாயத்தை திருச்சதகத்தின் இருபத்தியாறாவது பாடலில் **“சிந்தனை நின்றனக்காக்கி”** எனத் தொடங்கிச் சொல்கின்றார். சிந்தனையைப் புறப்பொருட்களிலே ஊடாட விடுவதனால் தானே முத்திக்குரிய முயற்சி தடைப்படுகின்றது. அதனை முழுவதும் இறைவன் பால் வைத்துவிட்டால்? சரி, சிந்தனை இறைவனிடத்திலே இருக்கிறது, ஆனால் பார்வையில் புறப்பொருட்கள் வந்து விழுகின்றதே? எனவே கண்ணினை இறைவன் திருப்பாதங்களையே காணும்படியாக பார்த்துக் கொள்வோமே. அது எப்போதும் சாத்தியமா? இல்லை! எனவே எப்போதும் இறைவழிபாடு செய்தால் ஓரளவு சாத்தியப்படுத்தலாமே. எனவே இறைவழிபாடு செய்து இறைபெயரையே எப்போதும் உச்சரித்து ஐம்புலன்களையும் இறைவனையே ஆட்கொள்ளும்படி விட்டுவிட்டால் முத்தியின் பொருட்டான முயற்சிக்குத் தடையில்லை!

உலகைப் படைத்த இறைவன் மேற்படி மாயையின் காரியப் பொருட்களைப் படையாது விட்டிருக்கலாமே? எல்லா ஆன்மாக்களும் தம் புலன்கள் எங்கு சிதறினும் அங்கெல்லாம் இறைவனே தெரியும்படி செய்திருக்கலாமே? ஏன் மனமும் சிந்தனையும் கொண்ட ஆன்மாக்கள் வாழப்போகும் உலகம் என்று தெரிந்தும் இறைவன் சுகபோகங்களையும் புறப்பொருட்களையும் படைக்க வேண்டும்?

ஏனெனில் ஆன்மாக்கள் அனைத்தையும் நுகர வேண்டும் அவை நிலையற்றவை எனும் சிந்தனையும் ஞானமும் தோன்ற வேண்டும், பின் நிலையின்பத்தை தேட வேண்டும். இந்த பட்டறிவே ஆன்மாக்களைப் புடம்போடும். அப்படி பக்குவப்பட்ட ஆன்மாக்கள் மாயாகாரியப் பொருட்களை கருவியாகக் கொண்டே இறைவனை அடையும் திறனைப் பெறும். இதனை **“விழவாமளவும் விளக்கனைய மாயை வடிவாதிகன்மத்து வந்து”** என்கின்றார் உமாபதி சிவாச்சாரியார். ஆணவ இருள் மறையும் வரை மாயையை விளக்காக்கிக் கொள்வோம், பரமசிவத்தின் பேரொளி கிட்டியதும் விளக்கும் மறையும் எம் பிறவித்துடக்கும் மறையும். அதற்கு மணிவாசகரின் உபாயத்தைப் பற்றுவோமாக!

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. சிவ செந்தமிழாதன்**
**இளம்புலவர் - தென்னாடு**
**(முதுமாணி - சைவசித்தாந்தம்)**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



சிவத்திரு. சிவ. செந்தமிழாதன், இளம்புலவர் - தென்னாடு,
செந்தமிழ் ஆகம சிவமடம் – கொக்குவில்.
+94 (77) 575 2551 / aathan@thennadu.org




# ஐம்பது கண்டது தென்னாடு!

நீங்கள் இப்போது படித்துக்கொண்டிருக்கும் இந்த தென்னாடு இதழ் ஐம்பதாவது திங்களின் வெளியீடாக உங்கள் கைகளில் இருக்கின்றது. கடந்த 2020ஆம் ஆண்டு ஐப்பசித் திங்களில் தொடங்கிய இந்த இதழ் தனது நான்கு ஆண்டு இடையறாத பயணத்தைத் தொடர்ந்து தன் ஐம்பதாவது திங்களிலும் காலடி பதிப்பது நாம் எல்லோரும் மகிழ்ச்சி அடைய வேண்டிய விடயமாகும். இலங்கையில் சைவத் தமிழ் திங்கள் இதழ் ஒன்று இலவச வெளியீடாக குறித்த தினத்தில் தொடர்ச்சியாக வெளிவருகிறது என்றால், அது “தென்னாடு” நிறைமதி வெளியீடாக மட்டுமே இருக்க முடியும்.

இயன்றவரை பிறமொழிக் கலப்பின்றி, எம் மரபுகளை மீள வலியுறுத்தும் வகையில் தனித் தமிழ் வழிபாட்டை முன்னிலைப்படுத்தி சித்தாந்த சைவத்தை வரும் தலை முறையும் அறியத்தக்க முறையில் செய்திகளோடும், கட்டுரைகளோடும், காலத்துக்குத் தகுந்தவாறு தன் னைத் தகவமைத்துக் கொண்டு **“தென்னாடு இந்த வெற்றி இலக்கை அடைந்துள்ளது”**.

புலம்பெயர் தேசங்களில் வாழும் இளைய பிள்ளைகள் தாம் பயிலும் ஆங்கில மொழியூடாகத் தென்னாட்டின் “ஆங்கிலப் பகுதியை” அறிந்து, தமிழ் கற்கவும், சைவத்தை தெளியவும் அண்மைக்காலமாக தென்னாடு முயன்று வருகின்றது. இது புலத்துக்கும் தாய் நிலத்துக்குமான இடையறா உறவுப் பாலமாக, அறிவு, புலமை, சைவ தத் துவம் சார்ந்த கருத்துப் பரிமாற்ற ஊடகமாக என்றென்றும் தொடர வேண்டும்.

தென்னாடு இதழைப் படிப்பவர்கள், இதன் உள்ளடக்கங்களை பிறருடன் பகிரவும், இவ்விதழைப் பாதுகாத்து, தலைமுறைகளின் வாசிப்பு பழக்கத்தைத் தூண்டவும், உதவ வேண்டும். இன்றைய இளைய சமு தாயம் முற்றாக தம்மை முடக்கிக் கொண்டுள்ள சமூக வலைத்தளப் பாவனை, இணைய உலாவிகளின் ஆதிக்கம் என்பவற்றை சற்று நீக்க, எழுதும் ஆற்றலையும், வாசிப்பு மீதான பற்றுதலையும் அதிகரிக்க தென்னாடு இதழ் நல்ல கருவியாக அமையட்டும்.

ஐம்பூத நாதரின் அருளின் பெருக்கத்தாலும், தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமட முதல்வர் தென்னவன் பார்த்தி-பன் அவர்களின் அயராத முயற்சியாலும், அடியார் கூட்டத் தின் வேண்டுதலாலும், இளைய கைகளின் இணைவாலும் “தென்னாடு” ஆயிரம் இதழ்களைக் காண வேண்டும்! அருள் ஞானத் திரளாக அவை சைவத் தமிழ் மக்கள் அனைவரா லும் போற்றப்பட வேண்டும். இந்த நீண்ட பயணத்திற்கு அந்த ஐம்பதாவது இதழ் முதல் அடியாக அமைந்து விளங்குவதாக!

**ஞானத்தின் ஒளியாகி என்றும்,**
**நற்றமிழின் வழியாகி நின்றும்,**
**மோனத்தின் பொருளாகி ஐந்தும்,**
**முற்றுணர்ந்த நிறைவாகி காட்டும்,**
**ஈசனவன் அருளாவே காணட்டும்**
**தென்னாடு இன்னும் ஆயிரம்!**

**திருச்சிற்றம்பலம்**



# செல்வச்சந்நிதியுறை அருள்மிகு சந்நிதியானும் சித்தர்களும்

**(கடந்த திங்கள் தொடர்ச்சி)**

**கரும்பாவளி சமாதிகளின் அமைப்பு**

இறந்தபின் உடலை அடக்கம் செய்யும் முறை சமாதி எனப்படுகிறது. அதாவது சமழ்ஆதி ஸ்ரீ சமாதி. இறைவனுக்குச் சமமாதல் என்பது இதன் அர்த்தமாகும். சமாதிகளை மூன்று வகைப்படுத்தி நோக்குவர். ஒன்று இறந்தபின்னர் செய்யப்படும் சமாதிகளாகிய நில சமாதி, நீர் சமாதி, தீ சமாதி ஆகியன. இரண்டாவது திருவடிநிலை (ஜீவசமாதி) என அழைக்கப்படும். மீண்டும் பிறவாமல் முத்தி அடைய தானே உருவாக்கிய கல்லறையில் சமாதி அடைதலே திருவடிநிலை (ஜீவசமாதி) என்று அழைக்கப்படும். இதற்கு ஏழாலையில் அமைக்கப்பட்டிருக்கும் சடைவரதசுவாமிகளின் சமாதிையக் குறிப்பிடலாம்.

மூன்றாவது இருத்தி முத்தி சமாதி என அழைக்கப்படும். **“உயிருடனும் உடலுடனும் இறைவனுக்குச் சமமாக இருந்து பேரின்பம் அடைதல் அல்லது முத்தி அடைதல். எண்சித்தி யோகத்தில் எட்டாம் நிலையில் அடையும் யோக சமாதி. இதன்படிக் கிடைக்கும் முத்திக்கு இருத்தி முத்தி என்று பெயர்”** இதற்கு உதாரணமாக இராமானுஜரைக் குறிப்பிடுவார்கள்.

கரும்பாவளியில் உள்ள சமாதிகளை நோக்கும்போது இறந்தபின்னர் உடலை அடக்கம் செய்யும் நிலசமாதிகளாகவே அதிகமானவை அமைந்துள்ளன. மேலே இனங்காணப்பட்ட சித்தர்கள் மற்றும் அருளாளர்களுக்கான சமாதிகள் அவ்வாறுதான் அமைக்கப்பட்டன. ஜேர்மன் சுவாமி முதலான சிலரை அக்கினியில் எரியூட்டி சாம்பலை புனித நீரில் கரைத்த தகவல்களும் உள்ளன. ஆனால் அவர்கள் நினைவாக எழுப்பட்ட சமாதிகளும் உள்ளனவா என்ற தகவல் அறியமுடியவில்லை.

இங்கு அமைந்திருக்கும் சமாதிகள் பல்வேறு வடிவங்களை உடையனவாகக் காணப்படுகின்றன. சதுரமாக பீடம் அமைக்கப்பட்டு மேலே சிவலிங்கத்தை ஒத்த கூம்பு வடிவத்தில் அமைக்கப்பட்டவை. அறையும் உள்ளே பீடமும் அமைக்கப்பட்டவை. அறையும் உள்ளே சிவலிங்கத்தை ஒத்த கூம்பு வடிவத்தில் அமைக்கப்பட்டவை. அறையுடன் கூடிய பெரிய சமாதிகள்.




கலாநிதி சு.குணேஸ்வரன்
ஆசிரியர் -
யா / சிதம்பரக் கல்லூரி,
வல்வெட்டித்துறை


சதுர பீடமும் மேலே சிவலிங்க வடிவத்தை ஒத்ததாக அமைக்கப்பட்டவற்றுள் இனங்காணப்பட்ட சமாதிகளில் ஒன்று பரியாரியார் சுந்தரப்பாவினுடையதாக அமைந்துள்ளது. வடக்கு நோக்கிய அறை அமைத்து சிவலிங்க வடிவம் வைத்துக் கட்டப்பட்ட சமாதிகளில் ஒன்று வைரமுத்து சுவாமிகளுடையதாக அடையாளங் காணப்பட்டுள்ளது. பெரிய அறையுடன் கூடிய சமாதி நாகமுத்து ஐயருடையதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இச்சமாதிகள் பல்வேறு பட்ட வடிவமுடையனவாக அமைந்திருப்பதற்கும் அவற்றின் அளவுப் பிரமாணத்திற்கும் ஏதும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. குறித்த குடும்பத்தினரின் விருப்பம் மற்றும் பொருளாதார வசதி கருதி அவை அமைக்கப்பட்டுள்ளன என கருதலாம்.

வீரசைவ மரபில் சமாதிகள் வைக்கப்படும் முறை பற்றி வீரசைவ மரபியல் என்ற நூலில் சோ. பரமசாமி அவர்கள் குறிப்பிட்டுள்ளார். அதனையும் இங்கு தொடர்புபடுத்தி நோக்கலாம்.

**“உயிர்நீத்த வீரசைவரின் உடலை அதிக செலவின்றிப் பூமியில் நல்லடக்கம் செய்வதாயின், பூமியினுள்ளே நாலடிச் சதுரமாய்க் குடையப்பெற்ற கிடங்கினுள் அடியிலே உப்பைப் பரவியபின், பத்மாசனத்தில் இருத்திய உடலை வலிமையுள்ள துணியில் வைத்துக் கீழே இறக்கி, உரிய இடத்தில் அதனைக் கொண்டுபோய் வைக்கவேண்டும். பின்பு உடலைச் சுற்றி உப்பு, நெல், விபூதி என்பவற்றால் கழுத்து வரையில் நிரப்புதல் வேண்டும். கண்டத்திலிருந்து தலைக்கு மேல் வரையிலாவது தனி விபூதியால் மூடி நிரப்பிய பின் அதன் மேல் சட்டியோ குண்டானோ கவிழ்த்துக் குழியை முற்றாக மூடி விடுதல் முறையாகும். அவ்விதம் நிரப்பப்பட்ட குழி மண்ணினாலும் சாந்தினாலும் மூடிக் கட்டப்படும். சமாதி கட்டப்பட்ட உடலின்**



**அறையும் சிவலிங்க வடிவுமுடைய சிறிய சமாதி**

**தலைஉச்சிக்கு மேல் உயரமாக ஒரு பீடம் அமைக்கப்படும். அப்பீடத்தில் நினைவுக் குறியாக நடுகல், அல்லது சிவலிங்கம் ஒன்றை வைத்துப் திருநிலைப்படுத்தல் செய்வது வழக்கம்."**

இது வீரசைவர்களின் சமாதி வைக்கும் முறையாகும். வீரசைவர்கள் லிங்க வழிபாட்டை மேற்கொள்பவர்கள். ஆனால் செல்வச்சந்நிதியில் வாழ்ந்த சித்தர்களை வீரசைவ மரபிற்குள் வைத்து நோக்கவேண்டிய அவசியம் இல்லையென எண்ணுகிறேன். ஆனால் சமாதிகள் வைக்கும் பொது அமைப்பில் சில ஒன்றுமைகள் இருப்பதைக் குறிப்பிடலாம். இங்கு கவனிக்கத்தக்க ஒரு விடயம் சமாதி வைக்கப்பட்ட சித்தர்களின் அமைவிடத்தில் உயரமாகப் பீடம் அமைத்து அதன்மேல் சிவலிங்கம் வைப்பது. இதே அமைப்பில் பல சமாதிகள் கரும்பாவளியிலும் அமைந்துள்ளன.

**முடிவுரை**

சந்நிதியான் ஆற்றங்கரையான் என்றழைக்கப்பட்ட தொண்டைமானாறு செல்வச்சந்நிதி திருக்கோயில், ஆகமமரபு சாராத பூசை முறைகளுக்கு ஊடாக இலங்கையில் அமைந்திருக்கும் முருகன் கோயில்களிலே தொன்மையான கோயிலாக விளங்குகின்றது. 1947 ஆம் ஆண்டு இந்து சாதனம் தருகின்ற குறிப்பின்படி இங்கு இரண்டு சமாதிகள் இருந்தன என்று குறிப்பிடுகின்றது. மிக அதிகமான அன்னதான மடங்களைக் கொண்டதாக அமைந்த காரணத்தால் அன்னதானக் கந்தன் என்றும் அழைக்கப்பட்டான். இவையெல்லாம் ஏனைய கோயில்களில் இருந்து சமூக பொருளாதார பண்பாட்டுப் பின்னணியில் செல்வச்சந்நிதியைத் தனித்துவமாகக் காட்டுகின்றன. ஐராவசு சித்தருடன் தொடங்கிய சித்தர் வரலாறு 30ற்கும் மேற்பட்ட சித்தர்கள் செல்வச்சந்நிதிச் சூழலில் உலா வந்ததற்கு ஆதாரமாகியுள்ளது. இன்று கரும்பாவளியில் காணப்படும் சித்தர் சமாதிகளையும் இவ்வாறுதான் தொடர்புபடுத்தி நோக்க முடிகின்றது. அங்கு காணப்படும் சமாதிகளில் சிலசமாதிகள் மட்டுமே அடையாளங் காணப்பட்டுள்ளன.

இப்பிரதேசத்தில் ஏற்கனவே குறிப்பிட்ட ஏனைய மரபுரிமைச் சின்னங்கள் அமைந்திருப்பதாலும் சைவப் பண்பாட்டின் வழிவந்த சித்தர்களின் சமாதிகள் அமைந்திருப்பதாலும் பேணப்பட வேண்டியவையாக உள்ளன. இங்கிருக்கும் சமாதிகள் படிப்படியாக அழிவு நிலையை நோக்கிச் செல்கின்றன. எதிர்காலத்தில் நிறுவனம் சார்ந்து இவற்றைப் பராமரித்துப் பாதுகாத்துப் பேணவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் தொடர்ச்சியாக இந்தச் சித்தர் பரம்பரையினரின் அற்புதங்கள் அவர்களின் அருள்வாக்கு மொழிகள் என்பன தேடியறிந்து தொகுக்கப்படவும் ஏனைய சமாதிகளை இனங்காணவும் வேண்டிய பணிகள் எம்முன்னால் உள்ளன. இதனூடாக செல்வச்சந்நிதி என்பது ஆகமமரபு சாராத வழிபாட்டு மரபுடனும் ஆன்மீக ஞானம் சார்ந்த சித்தர் மரபுடனும் தொடர்புபட்டதாக அமைந்துள்ளது. இந்த அம்சம் எமது சமூக பண்பாட்டு மரபில் தனித்துவமானது. இதனாலேயே பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் சந்நிதி பற்றி எழுதும்போது இரண்டு அலைவரிசைகள் அற்புதமாக இங்கு இணைந்துள்ளன என்றுகுறிப்பிட்டார்.

(இக்கட்டுரையாக்கத்தின்போது மேலதிக தகவல்களுக்கு உதவிய தி. செல்வமனோகரன், வே.பவதாரணன், து. சண்முக சுந்தரம் ஆகியோருக்கு நன்றி)

**அடிக்குறிப்புகள்**

1. அனந்தராஜ். ந. வல்வை, (2001) சந்நிதிச் செல்வம், நந்தி பதிப்பகம், ப.8.

2. மேலது, ப.18.

3. சிவத்தம்பி. கா, (2000 புரட்டாதி) ஞானச்சுடர், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, தொண்டைமானாறு.

4. ஆறுமுகநாவலர், (1865) 4 ஆம் பாலபாடம், ப.151.

5. மேலது, ப.159.

6. சண்முகதாஸ். அ. பேராசிரியர், மனோன்மணி சண்முகதாஸ், (1989) ஆற்றங்கரையான், வாராவொல்லை வெளியீடு - 3, ப.75.

7. மேலது, ப.129.

8. அரியரத்தினம். ந., (2019 ஜனவரி) மண் காப்போம்: கரம்பாவெளி, தாய்வீடு, கனடா.

9. https://siddharyogam.com



**சமாதிகள் அமைந்திருக்கும் சூழல்**

10. சந்நிதிச் செல்வம், ப.18.

11. அரியரத் னவரி) மண் காப்போம்: கரம்பாவெளி, தாயவடு, கனடா.

12. அரியரத்தினம். ந., (2018) சந்நிதியில் சித்தர்கள், தொண்டைமானாறு, ப.42.

13. பரமசாமி. சோ., (1995) வீரசைவ மரபியல், திருநெறிய தமிழ்மறைக் கழகம், இணுவில்.

14. அரியரத்தினம். ந., (2018) மேலது,

15. https://siddharyogam.com

16. பரமசாமி. சோ., (1995) மேலது.

**(முற்றும்)**

**திருச்சிற்றம்பலம்**

# ஈசனைத் தேடிய தென்னாட்டுப் பயணம்-

## அருள்மிகு சௌந்தரநாயகி உடனுறை பல்லவநாதர் - திருப்பல்லவனீச்சுரம் (பூம்புகார்)

## தேவாரப் பாடல்பெற்ற 274 சிவபுரங்களில் 10ஆவது திருக்கோயில் திருப்பல்லவனீச்சுரம் (பூம்புகார்)



**“கடையார்மாட நீடியெங்கும் கங்குல் புறந்தடவப்**
**படையார்புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவ னீச்சரமே”**

பல்லவராசன் பூசித்துப் பேறுபெற்றதும், இயற்பகை நாயனாரும், பட்டினத்தாரும் தோற்றம் செய்தருளியது மான அற்புதத் தலமே திருப்பல்லவனீச்சுரம் அருள்மிகு சௌந்தரநாயகி உடனுறை பல்லவநாதர் திருக்கோயில். இது தற்போது காவிரிப்பூம்பட்டினம் (பூம்புகார்) என்று மக்கள் வழக்கில் வழங்கப்படுகிறது.

**அமைவிடம்:** மயிலாடுதுறை, தமிழ்நாடு.

சீர்காழி, சிதம்பரம், திருச்சாய்க்காடு, மயிலாடுதுறை முதலிய பல ஊர்களிலிருந்து பூம்புகாருக்குப் பேருந்து வசதிகள் உள்ளன. பூம்புகாருக்குள் நுழையும்போது, எல்லையில் உள்ள ‘கண்ணகி வளைவை’த் தாண்டியதும் சாலை ஓரத்திலேயே கோயில் உள்ளது.

**இறைவர் திருப்பெயர்:** பல்லவனேசுவரர், பல்லவநாதர்
**இறைவியார் திருப்பெயர்:** சௌந்தர நாயகி
**கோயில் மரம்:** முல்லைக் கொடி
**தீர்த்தம்:** காவிரி சங்கமத் தீர்த்தம்
**வழிபட்டோர்:** சம்பந்தர், சேக்கிழார் ஆகியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம்.
**பாமாலை:** சம்பந்தர், சேக்கிழார்

### திருத்தலத்தின் மீது பாடப்பட்டத் திருப்பதிகங்கள்

**திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம்**

**அடையார்தம் புரங்கண்மூன்று மாரழலில் லழுந்த**
**விடையார்மேனி யராய்ச்சீறும் வித்தகர் மேயவிடங்**
**கடையார்மாட நீடியெங்கும் கங்குல் புறந்தடவப்**
**படையார்புரிசைப் பட்டினஞ்சேர் பல்லவ னீச்சரமே (1-65)**

**பரசுபாணியர் பாடல்வீணையர்**
**பட்டினத்துறை பல்லவனீச்சரத்**
**தரசுபேணி நின்றார் இவர்தன்மை யறிவாரார். (3-112)**

### திருத்தலச் சிறப்பு

பட்டினத்தார், இயற்பகை நாயனார் ஆகியோர் தோற்றம் பெற்ற திருத்தலம். காலவ மாமுனிவர் இத்தலத்தில் சிவனை வழிபட்டுள்ளார். இங்கு தலவிநாயகராக அனுக்கை விநாயகர் அருள்புரிகிறார். கருவறையில் சிவன், பெரிய இலிங்கமாகக்





காட்சி தருகிறார். இங்கு கொடிமரம் கிடையாது. பட்டினத்தார் தனிச்சன்னதியில் வடக்கு நோக்கியபடி காட்சி தருகிறார். இவரது சன்னதி விமானத்தில் பட்டினத்தார், மனைவி, அவரது தாய் மற்றும் மகனாக வளர்ந்த சிவன் ஆகியோரது சிற்பங்களும் இருக்கிறது. இங்கு சிவபெருமானுக்கு பெருந் திருவிழா கிடையாது. பட்டினத்தாருக்கே விழா எடுக்கப் படுகிறது. இதை **"அடியார் உற்சவம்"** என்கிறார்கள்.

ஆடித்திங்களில் பட்டினத்தார் திருவிழா 12 நாட்கள் நடக்கிறது. விழாவின் 10ம் நாளில் பட்டினத்தாருக்கு, சிவன் முத்தி தரும் நிகழ்ச்சி பெரியளவில் நடக்கும். மருதவாணராக பிறந்த சிவன், அவரை வளர்த்த சிவசர்மா சுசீலை தம்பதியர், பட்டினத்தார், அவரது மனைவி சிவகலை, பட்டினத்தாரின் தாய் ஞானகலாம்பிகை, பட்டினத்தாரின் சீடர் பத்ரகிரியார், நாயடியார் மற்றும் முருகனை மடியில் அமர்த்தியபடி குகாம்பிகை ஆகியோர் இங்கு எழுந்தருளல் திருமுன்களாக இருக்கின்றனர். காவிரி, கடலுக்குள் புகும் இடம் என்பதால் **"காவிரிபுகும்பட்டினம்"** என்றழைக்கப்பட்ட இவ்வூர் தற்போது **"பூம்புகார்"** என்றழைக்கப்படுகிறது.

## திருத்தல வரலாறு

முன்னொருகாலத்தில் இப்பகுதியில் சிவநேசர், ஞான கமலாம்பிகை என்னும் சிவபக்த தம்பதியர் வசித்து வந்தனர். இவர்களுக்கு சிவன் அருளால் ஒரு மகன் பிறந்தார். திருவெண்காடர் என்று அழைக்கப்பட்ட இவர், கடல் கடந்து வாணிபம் செய்யும் பணி செய்து வந்தார். 16ம் வயதில் சிவகலை என்பவரை மணந்து கொண்டார். திருமணமாகி பல்லாண்டுகளாக இத்தம்பதியருக்கு குழந்தைப்பேறு இல்லை. எனவே, திருவெண்காடர் சிவபெருமானை வழிபட்டார்.

இவருக்கு அருள் செய்ய விரும்பிய சிவன், வறுமையில் வாடிய சிவனடியார் தம்பதியரான சிவசருமர், சுசீலை என்பவர்களின் மகனாக பிறந்தார். மருதவாணர் என்றழைக்கப்பட்டார். ஒருசமயம் சிவசருமரின் கனவில் தோன்றிய சிவன், மருதவாணரை திருவெண்காடருக்கு தத்து கொடுக்கும்படி கூறினார். அதன்படி திருவெண்காடர், மருதவாணரை தத்தெடுத்து வளர்த்தார். மருதவாணரும் தந்தையின் தொழிலை செய்தார்.ஒருசமயம் வாணிபம் செய்து விட்டு திரும்பிய மருதவாணர், தாயாரிடம் ஒரு பெட்டியைக் கொடுத்துவிட்டு சென்றுவிட்டார்.

வீட்டிற்கு வந்த திருவெண்காடர், மகன் சம்பாதித்து வந்திருப்பதை காண பெட்டியைத் திறந்தார். திறந்தவருக்கோ அதிர்ச்சி! அதில் தவிட்டு உமிகளைக் கொண்டு செய்யப்பட்ட எரு மட்டும் இருந்தது. மகனை சம்பாதிக்க அனுப்ப அவன், தவிட்டு எருவைக்கொண்டு வந்ததைக் கண்டவர் கோபத்தில் அதை வீசியெறிந்தார். அதில், **"காதற்ற ஊசியும் வாராது காண் கடைவழிக்கே"** என்று எழுதப்பட்டிருந்தது. அதைக்கண்ட திருவெண்காடருக்கு ஒரு உண்மை உரைத்தது. **"மனிதன் எவ்வளவுதான் சம்பாதித்தாலும் கடைசியில் பயனில்லாத காதற்ற ஊசியைக்கூட கையில் கொண்டு செல்ல முடியாது,"** என்ற உண்மையை உணர்ந்தார். உடன் இல்லற வாழ்க்கையை துறந்த அவர், இங்கு சிவனை வணங்கி அவரையே குருவாக ஏற்றார், தனது இல்லற வாழ்க்கையை முடித்து, முத்தி கொடுக்கும்படி வேண்டினார். அவருக்கு காட்சி தந்த சிவன், தகுந்த காலத்தில் முத்தி கிடைக்கும் என்றார்.

அதன்பின் பட்டினத்தார் இங்கிருந்து திருத்தலப் பயணம் மேற்கொண்டு, சென்னை திருவொற்றியூரில் முத்தி பெற்றார். காவிரிப்பூம்பட்டினத்தில் பிறந்தவர் என்பதால் இவர், "பட்டி-னத்தார்' என்றழைக்கப்பட்டார். இவருக்கு அருள் செய்த சிவபெருமான் இத்தலத்தில் காட்சி தருகிறார்.

## திருக்கோயில் அமைப்பு

கோயிலுக்கு எதிரில் அகத்தியர் உண்டாக்கிய சான்னவி தீர்த்தத் திருக்குளம் உள்ளது. இராசகோபுரம் ஐந்து நிலைகளையுடையது. கோபுரவாயிலைக் கடக்கும் போது இடப்பால் அதிகார நந்தி சந்நிதியுள்ளது. வாயிலைக் கடந்து வந்தால் வெளிச்சுற்றில் சூரியன், நான்கு சிவலிங்கத் திருமேனிகள், கைகூப்பிநின்ற நிலையில் பட்டினத்தார் சந்நிதி ஆகியவை உள்ளன. விநாயகரையடுத்துள்ள சுப்பிரமணியர் சந்நிதியில் பெருமான் உருவம் பெரியதாகவுள்ளது. அடுத்து திருமகள் (கஜலட்சுமி) சந்நிதியும், ஒரே சந்நிதிக்குள் சனீசுவர், பைரவர், சந்திரன் ஆகிய திருமேனிகள் உள்ளன.

வெளி மண்டபத்தில் தலப்பதிகக் கல்வெட்டு உள்ளது. வலப்பால் அம்பாள் சந்நிதி, நேரே பெரிய, பருத்த சிவலிங்க பாணத்துடன் கூடிய கம்பீரமான காட்சியைத் தந்தவாறு பல்லவனேசுவரர் திகழ்கின்றார். உள்மண்டபத்தில் வலப்பால் தில்லையமைப்பில் அமைந்துள்ள சபாபதி சபை வணங்கத்-தக்கது.

5-4-1995 ல் குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. நாடொறும் நான்குகால வழிபாடுகள் நடைபெறுகின்றன. பெருவிழா நடைபெறுவதில்லை. ஆடித் திங்களில் பட்டினத்தார் திருவிழா பன்னிரு நாட்களுக்கு நகரத்தார்களால் சிறப்பாக நடத்தப்பெறுகின்றது.

**திருச்சிற்றம்பலம்**

**சிவத்திரு. தென்னாடு நிலவன்**
**தகவல் - சைவசமயக் கலைக்களஞ்சியம் நூற்தொகுப்பு**

# திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணத்தின் பேருரை ஆசிரியர்
# சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் ஐயாவின் உரை நயம்



பவானி சிவ
அ.வேலுச்சாமி

**பாயிரம் பாடல் 4**

**மதிவளர் சடைமுடி மன்று ளாரைமுன்**
**துதிசெயு நாயன்மார் தூய சொன்மலர்ப்**
**பொதிநல நுகர்தரு புனிதர் பேரவை**
**விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே**

**பொருள்**

பிறைவளர்தற்கு இடமாகிய சடைமுடியை உடைய



**சிவக்கவிமணி**
**சி.கே சுப்பிரமணிய முதலியார்**

திருச்சிற்றம்பல வாணரை நினைத்து துதித்துச் செயல் செய்யும் நாயன்மார்களுடைய தூய சொன் மலரின் நலத்தை அனுபவிக்கும் தூயவர்களாகிய அடியார்களது பெருந் திருக்கூட்டமானது இறைவன் ஆணை வழியே உலகில் விளக்கமடைந்து வெற்றி பெறுவதாக.

**விளக்க உரை**

மதிவளர்சடை - ஐயா அவர்கள் மதிவளர்சடை என் பதற்கு மதியை வளரச்செய்து இடம் கொடுத்த சடை என்றும் மன்றுளார் எனக் கூட்டித் தம்மை அடைந்தார்க்கு நாள் நாளும் நல்லறிவு வளரச்செய்யும் இறைவன் என்றுரைத்தலுமாம் என்றும் ஆணவமல மறைப்பிலே கிடக்கும் உயிர்களுக்கு இறைவன் நல்அறிவு விளக்கம் செய்து தன்னை அடையும்படிச் செய்கின்றான் என்பது சாத்திரமாம் என்றும் பொருள் கூறியுள்ளார்கள்.

**முன்துதி செயும்**

முன்-நினைக்கின்ற, துதி-துதிக்கின்ற, செயும்-செய்கின்ற என மூன்றாகப் பகுத்து மனம் வாக்குக் காயம் என்ற மூன்றாலும் பணி செய்கின்ற நாயன்மார் என்க. முன் என்பதற்கு ஐயா அவர்கள் அடியவர்கள் தேவர்க்கும் ஏனைய எல்லார்க்கும் முன்னே சென்று நின்று துதிக்கும் உரிமையுடையவர் என்று கூறியுள்ளார்கள் **"தொண்டர்கள் பின் உம்பர் குழாம் மல்கு திருக்காளத்தி மாமலை"** என்று திருநாவுக்கரசு நாயனார் புராணத்திலும், **"தேவர் ஒதுங்கத் திருத்தொண்டர் மிடையும் செல்வத் திருவாரூர்"** என்று ஏயர்கோன் சலிக்காமநாயனார் புராணத் திலும் தெய்வச் சேக்கிழார் பெருமான் கூறியுள்ளார் கள்.

**"அண்டர்பிரான் தொண்டர் கழல் அமரர் பணியும் அணி ஆரூர்"** என்று நமிநந்தியடிகள் புராணத்திலும் அடியார்களைச் சிறப்பாக வைத்துப் போற்றிய பாங்கு சிந்திக்கத்தக்கது.

**நாயன்மார் :** தலைவர்கள், அடியார்கள், சிவபெருமானது திருவடி சம்பந்த முடையவர்களே ஏனை யாவர்க்கும் தலைவராவார் என்ற உண்மைப்படி அடியவர்களே நாயன்மார் (தலைவர்) என்று பெயர் பெறுவர், நாயனார் என்பது எல்லார்க்கும் தலைவராயினமை பற்றிச் சிவபெருமானுக்கே உரிய பெயர். அவர் பெயர் அவரைச் சார்ந்த அடியவர்க்கு மாயிற்று.

**"அழகிது நாயனீரே அமுது செய்து அருளும்"** என்றும் **"இழைத்தனர் நாயனாரென்று"** என்ற பாடல்களால் கண்ணப்ப நாயனார் புராணத்திலும், **"அயவந்தியமர்ந்த நாயனாரையும் அருச்சனை புரிந்திட நயந்தார்"** என்ற திருநீலநக்க நாயனார் புராணத்திலும், "தில்லை நாயனாரை நயந்துரை செய்தன" என்று திருவிசைப்பாவிலும் இப்படிப் பலதிருவாக்குகள் மூலமாக அறியலாம்.

**புனிதர் :** உள்ளும் புறமும் தூய்மையுள்ளவர்கள். **"மாசிலாத மணிதிகழ் மேனிமேல் பூசு நீறுபோல் உள்ளும் புனிதர்கள்"** (திருக்கூட்டச்சிறப்பு) இராசத தாமத குணங்களின் தொழில் ஒழிந்து சத்துவ குணத் தொழில் மிகுந்தவர்கள்.

**நாயன்மார் தூய சொல் மலர் பொதி நலன் நுகர்தரு**

நாயன்மார்கள் அருளிய தூய தேவாரம் திருவாசகம் முதலிய தூய சொற்களாகிய மலர்களிலே பொதிந்த நலமாகிய சிவபெருமானின் புகழ்ச்சிறப்புக்களை எண்ணி எண்ணித் திளைத்து அனுபவித்தல்.

நாயன்மார்களைப்பற்றிய தூயசொல் என்றுரைப்பினும் அமையும். நுகர்தரு - ஒருசொல், அதை நுகர்புனிதர், தருபுனிதர் என இரண்டாக்கித் தாமும் நுகர்ந்து பிறர்க்கும் தரும் புனிதர் என உரைக்கினும் அமையும்.

**பேரவை :** அடியார்களின் திறங்களை அனுபவிக்கும் பெரும் சபை பெரும் திருக்கூட்டம், இச்சபை இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் முக்காலத்தும் நிகழ்வதாதலாலும் அளவின்மையாலும் பெரும் சபை ஆயிற்று.

**"மூவேந்தர் தமிழ் வழங்கும் நாட்டுக் கப்பால்**
**முதல்வனார் அடிச்சார்ந்த முறைமையோரும்**
**நாவேய்ந்த திருத்தொண்டத் தொகையில் கூறும்**
**நற்றொண்டர் காலத்து முன்னும் பின்னும்"**

என்று அப்பாலும் அடிச்சார்ந்தார் புராணத்தில் ஆசிரியர் கூறுகிறார்.

**விளங்கிவெல்கவே**

விளக்கமும் வெற்றியும் பொருந்துவதாக என்க. விளக்கம் பெறுதல் உலகத்தாரால் போற்றப் பெறுதல், வெற்றி பெறுதல், மேலோங்கி நிற்றல், **"வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க"** என்று வாதவூரடிகள் இறைவன் திருவடிகள் வெல்க வெல்க என்று பலமுறையும் வாழ்த்திப் போற்றியது காணலாம்.

இந்தப் பாடலில் ஆசிரியர் பெருமான் புனிதர்களாகிய அடியார் பெருமக்கள் வீற்றிருக்கக் கூடிய திருக்கூட்டச் சபையை வணங்கியும் போற்றியும் பாடியுள்ளார். முதல் பாடலில் புராணம் பாடுவதற்கு அடியெடுத்துக் கொடுத்த கூத்தப்பெருமானுடைய திருவடிகளை வணங்கிய சேக்கிழார் பெருமான் இரண்டாவது பாடலில் திருவடியை வணங்கியதன் பயன் ஆன்மா பிறவி எடுத்த உறுதிசாரும் என்று கூறினார். மூன்றாவது திருப்பாடலில் ஆன்றோர் ஆச்சாரம் காக்கும் பொருட்டு விநாயகப் பெருமான் திருவடிகளை வணங்கியும் நான்காவது பாடலாகிய இந்தப் பாடலில் திருக்கூட்டத்தை வாழ்த்தியும் வணங்கியும் அடுத்த பாடலில் அவையடக்கமாகவும் கூறியுள்ளார்.

**(தொடரும்)**

**திருச்சிற்றம்பலம்**

**ஆக்கம் : பவானி சிவ அ. வேலுச்சாமி**
**நன்றிகள் - சமயத்தமிழ் திங்கள் இதழ்**

# தமிழிசைப் பேரொளி முனைவர்
# கோ.ப. நல்லசிவம் ஐயா யாழ்ப்பாணம் வருகிறார்



தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக மெய்யியல்த் துறை தலைவர், பேராசிரியர் முனைவர் சிவத்திரு. கோ.ப. நல்லசிவம் ஐயா அவர்கள் தென்னாடு சைவ மாணவர் சபை நடாத்தும் மார்கழிப் பெருவிழாவில் கலந்துகொள்ள இலங்கை வருகிறார். ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் என பலவற்றை வெளியிட்டுள்ள ஐயா அவர்கள், 20 இற்கும் மேற்பட்ட தேசிய அளவிலான கருத்தரங்குகள், மாநாடுகளையும் நடாத்தியுள்ளார். அமெரிக்கா, ஒசுத்திரேலியா, இலங்கை, இலண்டன், சிங்கப்பூர், மலேசியா, மியான்மர் (பர்மா), தென் ஆபிரிக்கா, ஜாம்பியா, நேபாளம் ஆகிய நாடுகளில் சொற்பொழிவுகள், தமிழிசை நிகழ்ச்சிகள், வகுப்புகள் போன்ற நிகழ்வுகளையும் நடத்தி வருகின்றார். உலகெங்கும் வலம்வந்து அரும்பணிகள் ஆற்றிவரும் பேராசிரியர் முனைவர் சிவத்திரு. கோ.ப. நல்லசிவம் ஐயா அவர்கள், வருகின்ற மார்கழித் திங்கள் 10ம் நாள் (25-12-2024) அன்று, யாழ்ப்பாண கலாச்சார மண்டபத்தில் நடைபெறவுள்ள மார்கழிப் பெருவிழாவில் சிறப்புரை ஆற்றுவதற்கு இலங்கை வருகிறார்.

**திருச்சிற்றம்பலம்**

# சைவத்தை அறிமின் சிவத்தை அறிமின்



**சைவ சித்தாந்த நூல்களில் அறுவகைச் சமயங்கள் பற்றிய குறிப்புக்கள் உண்டா? உண்டாயின் அவை காணபத்தியம் முதலிய அறு சமயங்கள் தொடர்பானவையா?**

அறுவகைச் சமயம், அறு சமயம், இருமுச் சமயம், ஐவகைச் சமயம் என்று சமயங்களை வகுத்துக் கூறுவதை தமிழ் இலக்கிய நூல்களில் காணலாம். தேவார திருவாசக நூல்களிலும் அறுவகைச் சமயம் பற்றிப் பேசப்படுகிறது. சைவ சித்தாந்த நூலாகிய சிவஞான சித்தியாரில் **"மெய்தரு சைவமாதி இரு மூன்று"**, **"அறுவகைச் சமயத்தோர்க்கும் அவ்வவர் பொருளாய்"** என்ற தொடர்கள் வருகின்றன. பிற சித்தாந்த நூல்கள் சிலவற்றிலும் அறுவகைச் சமயம் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. இவை எல்லாம் அவைகள் காலத்திலிருந்த சமயங்களை ஆறாறு சமயங்கள் கொண்ட பிரிவுகளாகப் பிரித்து, அப் பிரிவுகளை அகச் சமயம், அகப் புறச் சமயம், புறச்சமயம், புறப் புறச் சமயம் போன்ற பெயர்களால் குறிப்பிடுகின்றன.

சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய ஆறும் மேற்காட்டப்பட்ட அறுவகைச் சமயப் பிரிவுகளில் இல்லாதவை் சைவத் தமிழ் நூல்களில்

காணமுடியாதவை. இவற்றை அறுவகைச் சமயம் என்று சைவம் கொள்வதில்லை.

**சித்தாந்த நூல்களில் அளவை என்று கூறப்படுவது எது? விளக்குக.**

சமய தத்துவ நூல்களில் காணப்படும் அளவை என்பது ஒரு கொள்கையை உண்மையென்றோ பிழையென்றோ நிறுவுவதற்கு தேவைப்படும் கருவி எனலாம். ஏகான்ம வாதம் போன்ற சமயங்கள் அளவை ஆறு என்கின்றன. சைவசித் தாந்தம் காண்டல் அளவை, கருதல் அளவை, உரை அளவை என்ற மூன்றில் இவற்றை அடக்குகிறது.

கண்ணால் கண்டு அறிந்து உண்மை என நிறுவுதல் காண்டல் அளவை. புகையைக் கண்டு தீ இருக்கிறது என்று கருதல் போன்றவை கருதல் அளவை. ஞானிகள், அறிஞர், சான்றோ ரால் உரைக்கப்பட்டது உரை அளவை.

## சில விளக்கங்கள்

**முருகனை அறுமுகச் சிவன் என்று கூறுதலுண்டு. இதன் விளக்கம் என்ன?**

சிவனுக்கு ஐந்து முகங்கள் உள்ளன. அவை தற்புருடம், அகோரம், சத்தியோசாதம், வாமதேவம், ஈசானம் என்பன. இவை முறையே கிழக்கு நோக்கிய முகம், தெற்கு நோக்கிய முகம், மேற்கு நோக்கிய முகம், வடக்கு நோக்கிய முகம், வடகிழக்கு நோக்கிய முகம் ஆகும். 'ஐந்து முகர் தந்தமுரு கேசநம' என்ற கந்தபுராணத் தொடர் சிவபெருமானை ஐந்து முகம் உள்ளவராகக் காட்டுகிறது. இந்த ஐந்து முகங் களுடன் அதோ முகம் என்று இன்னொரு முகமும் கு உண்டு. இது கீழ் நோக்கிய முகம். ஐந்து முகத்துடன் அதோ முகமும் சேர்ந்து வந்த சிவவடிவமே முருகன் எனக் கொண்டு, அவனை அறுமுகச் சிவன் என்று கூறுதலுண்டு.

**சற்காரியவாதம் என்பது போல் விவர்த்தவாதம் என்றும் ஒன்று கூறப்படுகிறது. இது என்ன?**

உள்ளதே தோன்றும் என்பது சற்காரியவாதம். ('சத்'- காரிய மாதல்). இது சைவ சித்தாந்தத்தில் ஒரு முக்கிய கொள்கை.

உள்ள ஒரு பொருள் மாறாமல் இருக்க, அது மாறிவிட்ட தாகக் காணப்படுவது விவர்த்தவாதம். (விவர்த்தம் - விபரீதமானது). இது வேதாந்தத்தில் ஒரு முக்கிய கொள்கை. இதனை விளக்க வேதாந்திகள் பொதுவாகத் தரும் உதாரணம் பாம்பு - கயிறு பற்றியது. கயிறு பாம்பாக மாறாமல், பாம்பா கக் காணப்படுகிறது என்பது அவர்களின் உதாரணம்.

**சைவத்தில் ஆணவம் மூலமலமாகக் கொள்ளப் படுகிறது. கிறித்தவத்தில் மூலமான தீங்கு அல்லது பாவம் (original sin) பற்றிப் பேசப்படுகின்றது. இந்த இரண்டுக்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டென்று கருத முடியுமா?**

சைவத்தில் கூறப்படும் ஆணவம் உயிருடன் இயற்கை யாகச் சேர்ந்து அனாதியாக இருக்கும் மூலமலம். கிறித்த வத்தில் பேசப்படும் மூலமான பாவம் ஆதியில் ஒருவர் செய்த பாவம் அல்லது தீச்செயலாகும். எப்பவோ ஒருவர் செய்த இந்தப் பாவத்தின் பலனைப் பின் வந்தவரும் இன்றிருப்பவரும் இனி வருபவரும் அனுபவிக்க நேரிடுகிறது என்ற கருத்தை சைவசித்தாந்தம் ஏற்பதில்லை. சைவசித்தாந்தம் ஒரு அறி வியல் தத்துவம். ஒருவர் செய்த செயலின் பலனை அவரே அனுபவிக்க வேண்டும் என்பது சைவத்தின் கொள்கை.

**முத்தியின் பின் உயிர் சிவானந்தத்தை நிரந்தரமாக அனுப விக்கும் என்று சைவம் கூறுகிறது. உயிர் நிரந்தர சொர்க்கத்தை அனுபவிக்கும் என்று கிறித்தவம் கூறுகிறது. இந்த முடிநிலை அனுபவங்கள் இரண்டும் ஒன்றென்று கூறலாமா?**

நன்மை செய்தவர் அடைவது நிரந்தர சொர்க்கம் (eternal heaven), தீமை செய்தவர் அடைவது நிரந்தர நரகம் (eternalhell) என்ற கொள்கை கிறித்தவத்தில் காணக் கூடியது. சைவத்தில் சொர்க்கம் நரகம் என்பவை நிரந்தமானவை யல்ல. சொர்க்கத்தில் இன்பத்தையும் நரகத்தில் துன்பத்தை யும் அனுபவித்து முடிந்த பின் உயிர் மீண்டும் பிறப்பெடுக் கிறது. பாவம் செய்து நரகத்தில் விழுந்தாலும் உயிருக்கு முத்தி உண்டு அது திருந்த வாய்ப்புண்டு என்பது சைவக் கொள்கை. இறுதியில் உயிர் அடையும் நித்திய சிவப்பேறு சொர்க்கம் அல்ல. சொர்க்கத்தை விட மிக உயர்ந்தது அது.

**சில சமயக் கொள்கைப்படி நாம் கடவுளிடமிருந்து பிரிந்து வந்து இந்த உலக வாழ்வை எடுத்தோம். இது குறித்த சைவ சித்தாந்த விளக்கம் என்ன?**

வேதாந்தம் போன்ற சில கொள்கைகளின்படி நாம் பிரமத்திலிருந்து பிரிந்து வந்தோம் நாம் அதன் ஒரு கூறாக உள்ளோம் எமது ஆன்மீக சாதனையால் நாம் மீண்டும் பிரமத்துடன் சேர்ந்து விடுவோம். (பிரமம் - கடவுள் மேலான பொருள்). இது சைவ சித்தாந்தத்துக்கு உடன் பாடற்ற கொள்கை.

நாம் கடவுளிலிருந்து பிரிந்து வந்தோம், அதன் ஒரு கூறாக உள்ளோம் என்றால் எமக்கு கடவுளின் தன்மைகள் இருக் கவேண்டும் அவை இல்லை. கடவுளிலிருந்து எம்மைப் பிரித்தது மாயை என்ற ஒரு பொருள் என்று கூறப்படுகிறது. (சைவ சித்தாந்தம் கூறும் மாயை வேறு). இதனை ஏற்றுக் கொண்டால் கடவுளைவிட மாயைக்கு ஆற்றல் அதிகம் என்றாகிறது. இது ஏற்கமுடியாதது. எமது ஆன்மீக சாதனை யால் கடவுளுடன் சேர்ந்து ஒன்றாகி விடுவோம் என்றால், மீண்டும் பிரிந்து வரமாட்டோம் என்பது உறுதியல்ல. இத்த கைய காரணங்களால் நாம் கடவுளின் கூறு என்பதையும் கடவுளிடமிருந்து பிரிந்து வந்தோம் என்பதையும் சைவ சித்தாந்தம் ஏற்பதில்லை.

**சைவத் திருக்கோயில் அமைப்பு முறை மாயா காரியங்களா லான மனித உடம்பை ஒத்ததென்று கூறப்படுகிறது. இது குறித்த விளக்கமென்ன?**

சைவத் திருக்கோயில்கள் சைவ ஆகம விதிப்படி கட்டப் படுதல் மரபு. இது தொடர்பான ஆகம விதிமுறைகளை

அறிந்து தெளிந்த சிவாசாரியாரியார். சிற்பக் கட்டிடக் கலைஞர், அறிஞர் ஆகியோரின் வழிகாட்டலில் கோயில்கள் அமைக்கப்படுதல் அவசியம்.

உடம்பில் உயிர் விளங்குதல் போன்று திருக்கோயிலில் இறைவன் விளங்குகிறான். இறைவன் அருள் சுரக்கும் இடம் கோயிலின் (கர்ப்பக்கிரகம் அல்லது மூலஸ்தானம் எனப்படும்) கருவறை. இது மனித உடம்பில் உள்ள தலை எனக்கொள்ளலாம். இது போல் அர்த்தமண்டபம் கழுத்து, மகாமண்டபம் - மார்பு, யாகசாலை - நாபி, தப மண்டபம் - தொடை அல்லது உடம்பின் கீழ்ப்பாகம், கோபுரம் பாதம், எனக் கொள்வதுண்டு. இன்னொரு வகையாக, கோபுரம்-வாய், நந்தி - நாக்கு, கொடிமரம் உள்நாக்கு, தீபங்கள் இந்திரியங்கள், கருவறை - இதயம், சிவலிங்கம் - உயிர் என்று ஒப்பிடுதலுமுண்டு.

கருவறையின் மேலுள்ள விமானம் குறுகிக்குறுகி மேலே செல்வதைக் காணலாம். உயிர் உலகப் பற்றைச் சிறிது சிறிதாக விட்டு இறையருளை நாடி வளர்ந்து செல்ல வேண்டுமென்பதை இது உணர்த்துகிறது. விமானத்தின் மேலுள்ள குடம் போன்ற கலசம் திருவருள் வெளியில் ஆன்மா ஒன்றித் திளைப்பதை உணர்த்துகிறது. எழுந்தருளல்திருமுன் ஐம்பொன்களால் செய்யப்பட்டது. இறைவனின் ஐந்தொழிலைக் குறிப்பது இந்த ஐம்பொன். இறையருள் வெளிப்படும் இருப்பிடங்களான சிவ தத்துவங்கள் ஐந்தையும் குறிப்பனவாகவும் கொள்ளலாம்.

### திருக்கோயில் வீதிகளின் அமைப்புக்கும் தத்துவ விளக்கம் உண்டா?

ஆன்மாவுக்கு ஐந்து வகையான உடம்புகள் (பஞ்ச கோசங்கள்) உண்டென முன்பு படித்தோம். திருக்கோயில்களின் வீதிகள் ஐந்து, மூன்று, இரண்டு, ஒன்று என்ற எண்ணிக்கையில், கோயிலுக்கு ஏற்றதாக அமைந்திருக்கும்.

ஐந்து வீதிகள் உள்ள கோயிலில், அவை ஆன்மாவின் ஐந்து சரீரங்களையும (பஞ்ச கோசங்களையும்) குறிப்பன. ஐந்தாவதாக உள்ள வெளிவீதியிலும் பார்க்க அதன் உள்ளிருக்கும் நான்காவது வீதி (சுற்றளவு குறைந்து) குறுகியதாகி, தூல சரீரதிலும் பார்க்க சூக்கும சரீரம் நுண்மையானது என்பதை உணர்த்துகிறது. இவ்வாறே ஒவ்வொரு வீதியும் ஒவ்வொரு சரீரத்தின் நுண்மையை உணர்த்துவதாக உள்ளது.

மூன்று வீதிகள் கொண்ட கோயிலில், அவை தூல சரீரம், சூக்கும சரீரம், காரண சரீரம் ஆகியவற்றைக் குறிக்கும். ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவம் ஆகியவற்றைக் குறிப்பதாகவும் கூறுவதுண்டு. இவற்றை விட உயிர்களின் கேவலம், சகலம், சுத்தம் ஆகிய நிலைகளையும், ஆன்மா அடையும் பாச ஞானம், பசு ஞானம், பதி ஞானம் ஆகியவற்றைவும் குறிப்பதாகவும் கூறப்படுவதுண்டு.

இரண்டு வீதிகள் மட்டும் உள்ள கோயிலில், அவை ஆன்மாவின் தூல சரீரத்தையும் (அன்னமய கோசத்தையும்) சூக்கும சரீரத்தையும் (பிற கோசங்களையும்) குறிப்பன. ஒரு வீதி மட்டும் உள்ள கோயிலில், அது ஆன்மாவின் ஐந்து சரீரங்களையும் ஒரு சேரக்குறிக்கும்.

### நந்தி, பலி பீடம், கொடி மரம் ஆகியவை குறித்த விளக்கம் என்ன?

திருக்கோயிலில் உள்ள மூலமூர்த்தி, நந்தி, பலிபீடம் ஆகியவை முறையே, பதி, பசு, பாசத்தைக் குறிப்பன. நந்திதேவர் பாசம் நீங்கி உயர்ந்த ஆன்மாவைக் குறிக்கும். அவர் இறைவனை நோக்கியபடி இறை சிந்தனையில் இருப்பவர். கோயிலுக்குச் சென்று கும்பிடும் போது எமது பாசம் நீங்குவதைப் பலிபீடமும், இறைவனை அடைதலே நாம் கடைப்பிடிக்க வேண்டிய அறம் என்பதை நந்தியும், அவனை வழிபட்டுச் சிவப்பேறு பெறவேண்டும் என்பதை மூலமூர்த்தியும் உணர்த்துகின்றன.

கொடிமரத்தில் கொடிமரம் பதியையும், கொடிச் சீலை பசுவையும், தர்ப்பைக் கயிறு பாசத்தையும் குறிப்பன. ஆன்மா பாசத்தில் நீங்கி, இறையருளால் மேல் நிலையான வீடு அடைவதைக் குறிப்பது கொடியேற்றம். கொடி மரத்தில், சமதூர இடைவெளியில், ஆறு வட்ட வடிவான முடிச்சுக்கள் உள்ளன. இவை உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களைக் குறிப்பன. இந்த ஆதாரங்கள் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பன. இந்த ஆறு ஆதாரங்கள் வழியாகக் குண்டலினி சக்தியை எழுப்பி இறைவனுடன் ஒன்றும் யோக நெறியையும் கொடி மரம் உணர்த்துகிறது என்பர்.

### திருக்கோயிலில் இடம்பெறும் திருவிழாக குறித்த விளக்கம் என்ன?

கொடியேற்றம் பற்றி மேலே விளக்கப்பட்டது. திருவிழா நாட்களில் இறைவன் பல வாகனங்களில் அமர்ந்து வீதி வலம் வந்து அருள் புரிகிறான். எல்லா உயிர்களிலும் இறைவன் உடனிருந்து அருள்புரிவதை இது குறிக்கிறது.

பெரிய சில்லுகள் கொண்ட அடிப்பாகத்தை உடையது தேர். அதன் சுற்றதளவு மேல் நோக்கிக் குறைந்து கொண்டு போகும். அடிப்பாகம் நாம் வாழும் உலகத்தையும், உயிரின் கேவல நிலையையும் குறிக்கும். பிறவிகள் எடுக்குமுன் உயிர் ஆணவத்துடன் சேர்ந்திருந்த நிலை கேவலநிலை. பிறவிகள் எடுத்து தத்துவங்களுடன் சேர்ந்திருக்கும் நிலை சகலநிலை. பாசத்திலிருந்து நீங்கிய நிலை சுத்த நிலை. அலங்கரிக்கப்பட்ட தேரின் நடுப் பாகத்தில் இறைவன் எழுந்தருளும் பீடம் இருக்கிறது. இது சகல நிலையைக் குறிக்கும். இந்நிலையில் உள்ள ஆன்மாக்களாகிய நாம் இறைவனை வழிபட்டு உய்ய வேண்டும் என்பதை தேரின் நடுப்பாகம் குறிக்கின்றது. தேரின் மேற்பாகம் சிவப்பு, வெள்ளை நிறச் சேலைகளால் மாறி மாறி ஐந்து வட்டங்களாகச் சுற்றப்பட்டு ஒடுங்கிச் செல்லும். இது சிவ தத்துவங்கள் ஐந்தையும், ஆன்மாவின் சுத்த நிலையையும குறிப்பது. மேலே இருக்கும் முடி அல்லது கலசம் முத்தி நிலையைக் குறிப்பது. தேர் என்ற சொல்லே உலக வாழ்வைத் தேர்ந்து இறைவனை அறிதல் என்ற பொருளைத் தருகிறது.

தேரின் பின் வரும் தீர்த்தம் சிவனருளாகிய நீரில் குளித்து உயிர் இறையின்பத்தை அனுபவிப்பதை உணர்த்துகிறது. ஆன்மாவின் மலங்கள் நீங்கி சத்திநி பாதம் (இறையருள் வீழ்ச்சி) உண்டாவதையும் குறிப்பது தீர்த்தத் திருவிழா.

திருச்சிற்றம்பலம்

**மூலம் - சைவ சித்தாந்த வினாவிடை**
**(கலாநிதி க. கணேசலிங்கம்)**



# தென்னாடு

செந்தமிழாகம சிவமடம். கொக்குவில். யாழ்ப்பாணம். www.thennadu.org



**Siva Srisatkunarajah Srisankarshan**
English Editor - Thennadu
Thennadu Tamil Atheenam (Madam) - Australia
+61 49949 3300 sri@thennadu.org




# Celebrating Our HSC Students, A Call to cultivate Tamil culture and Leadership.

As you find yourselves midway through the HSC examinations, I extend my warmest congratulations to all Australian students navigating this significant academic journey. Your hard work and determination deserve recognition, and the community applauds your commitment to excellence. This moment is truly pivotal, and while you succeed at this step, we encourage you to envision the opportunities that lie ahead—not just in academia, but in the vibrant tapestry of our Tamil culture.

Upon completion of your exams, consider delving deeper into the richness of our heritage during your downtime. The Tamil language, not merely a means of communication, but a gateway to an expansive literary tradition that has thrived for millennia, though translated extensively, one could never truly strike a cord like one would in the mother tongue. Engaging with Tamil literature and exploring the history of our ancestors will ground you in the values that shape our identity. Moreover, experiential learning—visiting our roots quite literally, participating in cultural events across borders, and engaging with our international community can illuminate your understanding of yourself, the root of your desires, and your future.

In January 2025, a unique opportunity awaits. The youth Tamil and Saiva conference in Sydney and Melbourne, Led by the esteemed Dr. Sivakumar Ramakrishnan, promises to cultivate a new generation of leaders equipped with the knowledge of Tamil philosophy, culture, and its relationship with science. Dr. Sivakumar will guide participants in understanding self-leadership, a critical quality for personal empowerment, enabling you to recognize your strengths and navigate life's challenges confidently.

Thennadu urges all youth in Sydney and Melbourne to take advantage of this workshop. Not only will it enhance your leadership qualities, but it will also deepen your understanding of Tamil culture and its profound connections to the natural world. By bearing witness to these teachings, you will contribute to the collective growth of Tamil society.

As you continue with your exams, remember that academic success is just one aspect of your journey as your capability warrants you to be multifaceted, harnessing your culture towards leadership potentials. We wish you all the best in your remaining examinations and look forward to witnessing your achievements—not only as scholars but as future leaders who carry forward the essence of our Tamil identity.

# 'Oh lord, My consciousness be yours, thoughts be yours.......'






**Srisankarshan Srisatkunarajah**
English Eeditor
2023 Batch,
Jaffna Hindu College

'The reasoning behind our birth as Humans, is so that it yields in us attaining the state of Muththi (Moksham), through this opportunity that is a lifetime of wor ship' says Aarumuga navalar. The creation of humanity meant that our ever-swaying psyche had to be created too, things which have the capacity to obstruct and weaken the Athman's mission towards liberation and ultimately render one to remain completely oblivious to even the very concept of liberation itself, which is an Aathman's innate drive. This effect is achieved largely by significant embodiments of Maya, dictating the very fabric of our world and its triumphs, earthly pleasures. This, when internalized by our senses, gets reciprocated in varied ways amongst humanity as wants, proclivities, and much more. The Aathman, eluded by the pageantries of our psyche, sways for the mind and gives into sense gratification

and by extension yearns to secure false se curity by means of wealth amassment. This patheticism obscures the rare opportunity of human birth from attaining the rarity of a pathway it opens, seeking refuge in the godhead; effectively damning the soul to utter dismay where the realization of being so close yet so incapable haunts it. thus, feeding back into the cycle of rebirth.

To concur this loop, saint Manikavasakar introduces some insights into this matter in one of his divine works, the 26th hymn of his sacred shathakam, in its opening versus, '

"Sinthanai nin ranakkaakki naayi naen tran - You made me dedicate my thought to You solely",These versus seek to justify a margam of life and the justification goes as follows: The actions of our mind leading to obsessions over external entities is ob viously the opaquest obscurity that blocks the sight of an Athman towards liberation. Given that it's common knowledge, why shouldn't one deliberately focus their mind on the Godhead to forsake the grasp of maya? Even if one accomplishes this, there still is the issue of our functional vision. It takes in so much of what is exclusively maya. This is a massive distraction even for one whose mind is under focus and control. Wouldn't it be best to rest our sight obstinately on the lord's feet? Yes, but only if that were possible for our senses! So, the best we could do is to immerse ourselves in servitude and worship by chanting the divine names of the Godhead constantly, in an attempt to master our senses. This effort, if fully realized, would clear all the hurdles in the path towards the state of Muththi (Moksham).


These questions beg to be asked. Couldn't the Lord have abstained from birthing Maya and its manifestations alongside humanity in the first place? Couldn't the Lord have been truly and tangibly Omnipresent to be perceptible at any given way or direc tion that a muddled up Human glances, ensuring that it's impossible to slip away from divinity? What would have enticed the omniscient creator to deliberately create these worldly indulgences, ecstasies and falsified concepts of pleasure that are lethal pitfalls, knowing all too well about the nature of humanity?

The answers fall under the broad umb rella of experiential learning rather than the state of vague knowing. The Lord intended things this way fully focused for the purpose of an Athman to have been through all the possible learning curves and obstacles this complex existence offers through the many cycles of births. It ensures that an Aathman which treads steadily towards Muththi (Moksham), does so realizing the true reasoning behind its yearning for the concept of Muththi (Moksham) and the ludicrousness of the volatility of Maya through rigorous and sustained method and practice. Better yet, a realized soul through this pedagogy gains the skill to let maya be a tool rather than an obstruction in the ultimate pursuit. Saint Umaapathi Sivachariyar conceptualizes this in his outpourings as well, which urges us as follows: Let us utilize Maya as a source of light until the fold of Arrogance and self-obsession ceases, which is when the all-encompassing light of Pathi, the Ultimate state of Godhead (Para-sivam) overflows, dissolving Maya, thus cleansing our Aathman from the impediment of the cycle of Birth. In that pursuit, let us take on the promising path laid generously for us by the Saints.

# Miracles of Saiva Saint Thirugnanasampanthar Swamikal



Siva
P.Abiram
SG



Thirugnanasampanthar was a Saiva poet/saint, who lived in the seventh century CE.He is one of the most prominent saints amongst the 63 Nayanars. Sampathar's entire collection of hymns about Lord Sivan is called "Thirukkadaikappu''. These were later collected to form the first three volumes of the Thirumuraikal – one of the principle texts for Saiva Sithantham philosophy.

Sampanthar and his disciples once travelled to Thiruchengodu. The temple at Thiruchengodu which is believed to be around 2000 years old is situated on top of a 650 feet high hill known as Nagagiri and the path to it consists of 1200 steps. Its north-facing Gopuram is 84.5 feet tall and was built in 1512.

It was here were most of the people in the town suffered from a fever. That fever affected Sampanthar's disciples as well. Sampanthar prayed to Sivan and sang the hymn that goes as follows:

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பதும் உந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழற் போற்றுதும் நாமடியோஞ்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்.

avvinaik kivvinai yaamendru sollu mahthariveer
uyvinai naadaa thiruppathum unthamak koonamandrae
kaivinai seythem piraankalat potruthum naamadiyoan
seyvinai vanthemaith theendapperaa thiruneelakandam

In English this translates to, "All of you know the saying that we reap in this birth the fruits of our actions in previous births. Is it proper that you do not seek a way to escape this fate. We are devotees of Sivan. Let us do His service with our body and mind and worship His holy feet.

Sivan cured Sampanthar's disciples as well as the people of the town from the fever.



# Magnitude of Actions (Vinaikal)

**Last month Summary :**

Sivakan, a 8 year old kid, was talking with his friends when they asked him, why is there so much discrepancy between people even at birth? "He replied, some souls are born with challenged organs , due to the actions of their past lives, similarly good deeds performed in this life will decide the future for our next life.

Today's discussion focused on Vinai. I had previously mentioned that all the actions we perform have both a past and a future. However, my friends struggled to grasp the meaning behind this statement, so I decided to explain it with an example.

"I have a plot of land, an ancestral property in our village. I decided to take up farming on this land. So, I dug a well and used the water to irrigate the crops. After much hard work, I enjoyed a plentiful harvest. From this, I set aside the best-quality portion as seed for the next season, while the rest was used for our daily needs.

In this world, every effort we put in brings results that we will experience later. This is known as Ethirvinai (future actions). It's like the new harvest, a result of the work I put into the field. The portion of the harvest used for daily consumption is known as Aruvinai (present actions), while the portion saved for seed is Tholvinai (past actions).

Farmers repeat this cycle over and over again, saving seed from each harvest for future crops. In the same way, every action we take extends into these three types of Vinai. Ethirvinai refers to the results of our current actions, which we'll experience in the future. Aruvinai is what we're experiencing now, and Tholvinai is the stored results of our past actions, accumulating over time.

In the example, the stored seeds increased with each harvest. Similarly, while we experience Aruvinai in each life, the stored Tholvinai continues to grow, becoming a large burden. All three types of Vinai are the results of our own actions, and they must be experienced through both good and bad situations.

The circumstances we encounter in this life are the results of actions we performed in previous lives. As we navigate these situations, we continue to take actions, which will come back to us as new experiences in the future. This is not just a concept, but something we actively engage in, and it requires us to be reborn again. Thus, the cycle of birth and death continues endlessly.

Moreover, just as a farmer toils in the field, the field itself plays a role in the harvest. Similarly, it is the Lord who governs the results of our actions. A magnet attracts iron, but the iron cannot be drawn without someone placing it near the magnet. In the same way, for us to experience the results of our actions, they must be presented to us. It is the Lord who provides the body, the worldly objects, and the conditions we need to go through these results and reduce the burden of Vinai. Out of his infinite compassion, the Lord ensures we are born again and again.

In this world, it is common for a father to reprimand his son to correct his behaviour. A doctor may cause pain during surgery for the patient's benefit, and a teacher might discipline students to help them improve. Similarly, a judge may punish a criminal to encourage reform. None of these actions are done out of cruelty, but with the intention of helping them. Likewise, the Lord, out of compassion, provides us with the experiences and knowledge we need, based on our past actions, to progress.

I explained all of this to my friends using the example of the yearly harvest. Vinai exists, and it is the cause of future births. It comes in three forms. My friends were astonished and finally understood, saying, 'Oh! Now it makes sense.' With their new understanding, they went home."

Saiva Philosophy Reference: The takeaway of this story is that Vinai (karma) manifests in three forms, past, present, and future actions which shape the soul's experiences across multiple lifetimes. The cycle of birth, death, and rebirth is gov erned by the consequences of one's deeds, with Sivan guiding the soul through these experiences to reduce the burden of ac cumulated karma.


**Reference: Saiva Siddhantham – A Way of Life by Kovai Kizhar**

# தென்னாட்டு நிகழ்வுகள்





புரட்டாசித் திங்கள் தேய்பிறைக் கழுவாய் வழிபாடுகள் (30-09-2024)





அமரர் திருமதி வசுந்தராதேவி பரமேஸ்வரநாதன் அம்மையாரின் திருவடிப்பேறு வழிபாடுகள் (06-10-2024)





# தென்னாட்டு நிகழ்வுகள்



ஒன்பானிரவு (நவராத்திரி) பத்தாம் நாள் சிறப்புப் பூசை வழிபாடுகள் (12-10-2024)



ஒசுத்திரேலியாவில் ஏடு தொடக்கல் (12-10-2024)





புரட்டாசி பேரொடுக்க மறைமதி (மாலயம்) சிறப்பு வழிபாடுகள் (02-10-2024)





புரட்டாசித் திங்கள் நிறைமதி வழிபாடும் இதழ் வெளியீடும் (17-09-2024)



தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடம் மற்றும் சைவ மாணவர் சபையின் ஐம்பதாவது திங்கள் செய்தியிதழ் "தென்னாடு", சிவத்திரு. சிவஞானம் ஜெயானந்தன் அவர்களால் வடிவமைக்கப்பட்டு நல்லூர் "மதி அச்சகத்தில்" அச்சிடப்பட்டு, மேழ விழுகம்ப ஊழி ஆண்டு 2298 துலை நல் லோரை புரட்டாசித் திங்கள் 31ம் நாள் நிறைமதி அன்று (17-10-2024 வியாழக்கிழமை) தென்னாட்டில் வெளியிடப்பட்டது. முதலாம் தமிழ்ச் சங்கம் கண்ட தென்னாடு என்பதை மனதில் நிறுத்தி, தென்னாடு செய்தியிதழையும் இயன்றளவு பிறமொழிக் கலப்பின்றி தெய்வத்தமிழில் தர முயற்சிக்கிறோம். சைவ மாணவர் சபை பதிவு இலக்கம் - HA/4/JA/343.

தொலைபேசி +94 21 222 9722 | புலனம் +94 (70) 770 1111| மின்னஞ்சல் thennavan@thennadu.org
fb.com/thennadu | youtube.com/thennadu | www.thennadu.org